இலங்கை தேசிய ஆராய்ச்சி மன்றம்

" பொருளியல் அபிவிருத்திக்கான ஆராய்ச்சி"

# வருடாந்த அறிக்கை

# 2011




தேசிய ஆராய்ச்சி மன்றம்

380/71 பௌத்தாலோக மாவத்தை

கொழும்பு - 07

தொலை பேசி : 011-2697538
தொலைமடல் : 011-2697166
மின்னஞ்சல் : nrc@sltnet.lk
இணையத்தளம் : www.nrc.gov.lk

# உள்ளடக்க அட்டவணை


- நோக்கு பணி குறிக்கோள்கள்
- தலைவர் செய்தி
- மன்றத்தினதும் மற்றும் பதவியணியினரதும் சுருக்க விவர அறிக்கை
- செயலாளர் அறிக்கை
- எதிர்வரும் மூன்று வருடங்களில் நிதி முனைப்புகள்
- பிஎச்டி மற்றும் ஆராய்ச்சி மானிய நிகழ்ச்சித்திட்டம்
- விஞ்ஞான ஆராய்ச்சிக்கான ஜனாதிபதி விருதுகள்
- நிறுவன மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டம்
- ஊடகம் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்
- நிதிக் கூற்றுகள் 2011
- கணக்காய்வாளர் அறிக்கை


இலங்கை தேசிய ஆராய்ச்சி மன்றம்

380/71, பௌத்தலோக மாவத்தை கொழும்பு 07 • தொலை பேசி : 011/-2697538 தொலைமடல் : 011-2697166 .
nrc@sltnet.lk • www.nrc.gov.lk

## நோக்கு

“ **வி**ஞ்ஞானம் மற்றும் அறிவினை அடிப்படையாக கொண்ட அபிவிருத்தியடைந்ததொரு நாட்டினது தகுநிலையினை சாதிப்பதற்கு இலங்கையை இயலச் செய்தல்”

## பணி

“ **வி**ஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தை அடிப்படையாக கொண்ட அபிவிருத்தியடைந்ததொரு நாட்டின் தகு நிலையினை சாதிப்பதற்கு அடிப்படை மற்றும் பிரயோக ஆராய்ச்சியினை மேம்படுத்துதல் நிதியீடு செய்தல் துணைமையாக இருத்தல் மற்றும் கண்காணித்தலுடன் இலங்கையின் மனிதவளத்தை மேம்படுத்துதல்”

380/71, பௌத்தலோக மாவத்தை கொழும்பு 07 • தொலை பேசி : 011/-2697538 தொலைமடல் : 011-2697166 .
nrc@sltnet.lk • www.nrc.gov.lk

# குறிக்கோள்கள்

- உயர் விளைப்பயன் தரக் கூடிய கல்வியியலாளருடன் மேலதிகமாக தனியார் துறையினர் மற்றும் கைத் தொழிற்துறை பிரதிநிதிகளை மன்றத்திற்குள் கொண்டு வருதல்;
- உயர் ஆராய்ச்சி பட்டங்களிக்கு தம்மை பதிவு செய்துக் கொண்ட பல்கலைக்கழகங்களை அடிப்படையாக கொண்ட ஆராய்ச்சி மாணவர்களுக்கு நிதியீடு செய்தன் மூலம் விஞ்ஞானத்தின் சகல துறைகளிலும் அடிப்படை மற்றும் பிரயோக ஆராய்ச்சியினை மேம்படுத்துலும் மனிதவள விருத்திக்கு துணைமை செய்தலும்;
- ஒவ்வொரு அரச துறை விஞ்ஞான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகங்களின் ஆராய்ச்சியாளர்களின் ஆராய்ச்சி பிரயத்தனங்களை திட்டமிடலும் கூட்டிணைப்பு செய்தலும்;
- அரச துறை விஞ்ஞான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகங்களினை சார்ந்த தனிப்பட்ட ஆராய்ச்சியாளர்களின் ஆராய்ச்சிக்கு துணைமை செய்தலிற்கும் அவர்களின் செயலாற்றுகையை மதிப்பீடு செய்தலிற்கும் அத்தகைய ஆராய்ச்சிக்கு திறைசேரியின் ஜனாதிபதி செயலகத்தின் ஊடாக நிதியீடு செய்தலிற்கு குறிப்பிடப்பட்டகால இடைவெளிகளில் தொடர்ச்சியாக பரிந்துரைப்புகளை மேற்கொள்ளல்;
- பல்கலைக்கழகங்களினால் முன்னெடுக்கப்படும் உயர் ஆராய்ச்சி பட்டங்களை பெற்றுக் கொள்வதற்கு விழைகின்றவர்களும் அரசதுறை விஞ்ஞான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகங்கள் மற்றும் பல்கலைக் கழகங்களில் இருக்கின்றவர்களுமாகிய ஆராய்ச்சியாளர்களின் இணை ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களினை மேம்படுத்தல்;
- கைத்தொழிற்துறை, பல்கலைக்கழகங்கள் மற்றும் அரச துறை விஞ்ஞான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகங்களிடையேயான பங்குடமைகளை மேம்படுத்தலும் துணைமை செய்தலும்;
- வெற்றிகரமான ஆராய்ச்சிகளுக்கும் மற்றும் பதிது புனைதலிற்கும் தேசிய அங்கீகாரம் பெறப்படுதலிற்கு முறைமைகளை விருத்தி செய்தலும் சன்மானங்களை வழங்கலும்;
- தேசிய அபிவிருத்தி தேவைப்பாடுகளுக்கு விளைப்பயனை துலங்கலாக தரக்கூடிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆராய்ச்சி கலாச்சாரத்தையும் மற்றும் சமூகத்தையும் இலங்கையில் வளர்தலும் அதனை நிலைத்திருக்கச் செய்தலும்.



# தலைவர் செய்தி


இலங்கையில் அரச ஆராய்ச்சிகளுக்கு நிதியீடு செய்யும் தலையாய நிறுவனமான தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் 2011 ஆம் நிதியாண்டுக்குரிய வருடாந்த அறிக்கையை முன்வைப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த இராஜபக்ஷவின் அரசியல் சட்ட அதிகாரங்களின் கீழ் அவரின் "எதிர்காலத்தைநோக்கிய" மஹிந்த சிந்தனை அபிவிருத்தி திட்டத்தினை பூரண நிறை வேற்றம் செய்தலிற்காக தேசிய ஆராய்ச்சி மன்றம் தாபிக்கப்பட்டது.

2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில், தேசிய ஆராய்ச்சி மன்றமானது. 51 புதிய ஆராய்ச்சி மானிய கருத்திட்டங்கள் மற்றும் 67 பிஎச்டி/எம் பில் மாணவர்களுக்கு இணையுரிமை வழங்குதல் ஆகிய வற்றை செய்யத் தொடங்கியதன் மூலம் ஆராய்ச்சி மானியங்களை வழங்குதல் மற்றும் பிஎச்டி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களினை வழங்குதல் ஆகிய நடவடிக்கைகளை தொடர்ந்து செய்தது. விவசாய திணைக்களத்தை மதிப்பீடு செய்தல் பற்றிய இறுதி மீளாய்வு அயிக்கையானது, மன்றத்திற்கு முன்னளிப்பு செய்யப்பட்டதை தொடர்ந்து அது அதிமேதகு ஜனாதிபதியின் செயலாளர் திரு. லலித் வீரதுங்க அவர்களிற்கு கையளிப்பு செய்யப்பட்டது. மதிப்பீடு தொடர்பில் எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய தீர்வு நடவடிக்கைகள் பற்றி, விவசாயத்திணைக்களத்துடன் சம்மந்தப்பட்ட அமைச்சர்கள் மற்றும் திணைக்களத்தை சார்ந்த உயரதிகாரிகள் ஆகியோருடன் ஜனாதிபதி செயலகத்தில் நடாத்தப்படுவதற்கு ஒரு கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. அறிக்கையில் குறிப்பீடு செய்யப்பட்டிருந்த பரிந்துரைப்புகளை செயற்படுத்துகை செய்வதற்கு விவசாயத்திணைக்களம் ஒப்புதலை தெரிவித்தது. 2007,2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்படவேண்டிய விஞ்ஞான ஆராய்ச்சிக்காக ஜனாதிபதி விருது வைபவம் தொடர்பிலான நிகழ்ச்சித்திட்டம் தொடங்கப்பட்டது. தேசிய அபிவிருத்தி மற்றும் விஞ்ஞானத்தை பிரபல்யப்படுத்துல் என்பனவற்றிக்காக குறிப்பிட்டு சொல்லத்தக்களவு பங்களிப்பினை ஊடகம் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்களின் ஊடாக மேற்கொண்ட தேசிய ஆராய்ச்சி மன்றத்தினால் வருடகாலப்பகுதியில் பெயர்குறிப்பீடு செய்யப்படுவதற்கான பிரசுரிப்புக்களுக்கான தெரிவுகள்,எழுத்தாளர்களை இனம்காணுதல், திரள் சுட்டியினை கணிப்பீடு செய்தல், ஆதாரப் புத்தகத்தினை தயாரித்தல் என்பன பூரணப்படுத்தப்பட்டது. அத்துடன் மொனராகல மாவட்டத்தில் Neonatal Screening for congenital hypothyroidism ( பிறந்த 30 நாள் சிசுவின் கண்டக்கழலை இனை நுண்ணாய்வு செய்தல்),2011ஆம் ஆண்டின் தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்கு பல அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்கள் 2012 ஆம் ஆண்டின் தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்கு பல அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற அதனது அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஊடகம் என்பனவற்றின் ஊடாக தேசிய அபிவிருத்தி மற்றும் விஞ்ஞானத்தை பிரபலயப்படுத்துதல் என்பனவற்றிக்கு தனது பங்களிப்பினை வழங்கியது.தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் செயற்பாடுகளுக்கும் வளர்ச்சிக்கும் தமது ஆதரவை வழங்கிய புதிய அமைச்சர் கௌரவ. பவித்தரா வன்னியாரய்ச்சி, பிரதியமைச்சர். பய்சர் முஸ்தபா மற்றும் அமைச்சின் செயலாளர் திருமதி.தாரா விஜயதிலக ஆகியோருக்கு எனது மனப்பூர்வமான நன்றியை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

வருடகாலப்பகுதியில் மன்றத்தின் செயற்பாடுகளுக்கு ஆதரவினை வழங்கிய மன்றத்தின் நிறைவேற்று செயலாளர், அம் முயற்சிகளை சாத்தியப்படச் செய்வதற்கும் சாதிப்பதற்கும் முன் வைக்கப்பட்ட மன்றத்தினரின் கடும்முயற்சி மற்றும் விடா முயற்சிக்கும் எனது நன்றியை தெரிவிப்பதற்குரிய ஒரு நல்ல வாய்ப்பாக இவ்வாய்ப்பினை நான் எடுத்துக் கொள்கிறேன்.

இலங்கையின் பொருளாதாரம் மற்றும் விஞ்ஞான அபிவிருத்திக்கு தேசிய ஆராய்ச்சி மன்றம் தொடர்ந்தும் எதிர்காலத்தில் தனது பங்களிப்பினை ஆராய்ச்சிகளின் ஊடாக வழங்கும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

பேரா.இ.எச்.கருணானாயக்க<br>
தலைவர்





## மன்றத்தினதும் மற்றும் பதவியணியனரிதும் சுருக்க விவர அறிக்கை



**வித்யாஜயோதி பேராசிரியர் எரிக்.எச்.கருணாநாயக்க**
**தலைவர்/தே.வி.ம.**

B. SC (Cey ), M. Sc ( Lond ), DIC.,

PhD (Lond ) F. I Chem. C. Chem.



**பேராசிரியர்.டபிள்யு.எ.கெ.எம்.டி.கொஸ்டா**

B.Sc Agric (Peradeniya) , PhD (Reading ) UK



**பேராசிரியர் .டபிள்யு.பிரியான் எஸ்.டபிள்யு**

BScEng (Hons ), PhD( Lond ), DIC, CEng, FIE (SL ), MIStructE, FNAS (SL )



**பேராசிரியர் கீர்த்தி தென்ன கோன்**

B.Sc (Ceylon ), M. Sc ( Hawaii ) USA , PhD ( Hawaii ) USA



**பேராசிரியர்.எம்.கிரா.தப்ரியு.**

B.Sc. Hons. (Cey ), Ph.D. (So 'ton, UK ), C.Chem., F.I.Chem.C., FNAS (SL )



**பேராசிரியர் இ.ஆர்.ஜான்ஸ்**

BSc (Hons ) (Ceylon) , PhD Dalhouse



**திரு.மொக்செவி. ஆர்.பெரிலிங்**

BSc (Engr., Cey. ), MS( IE & Mgmt.,.Purdue )

ISMP (Harvard B S ), M.I.Mech.E-C.Eng. (Lond) ,F.I.E. (SI )

F.I.B (SI ).

# மன்றத்தினதும் மற்றும் பதவியணியினரிதும் சுருக்க விபர அறிக்கை



**வித்யாஜயோதி பேராசிரியர்.எம்.எ.கரீம்**

B,Sc (Ceylon), PhD. (Chelsea) UK



**வித்யாஜயோதி பேராசிரியர் எச்.ஜானக டி.சில்வா.**

MBBS (Colombo), MD (Colombo), DPhil (Oxford), FRCP (London), FRCP (Edinburgh), FCCP, FNAS (SL), Hon. FRACP, Hon. FRCP (Thailand)

**பேராசிரியர் கதிர்காமநாதன் கந்தசாமி.**

B.Sc (Cey) PhD (Keele) Eng.





**கலாநிதி ஜி.எ.ஸ் பிரேமகுமார**

B. Sc (Colombo), PhD Colombo) MIBiol CBiol MIChemC

**பேரா.அருணி திலகரட்ன**

BDS, Ph D, Dip (Coun)

**தேசமான்ய எந்திரி.கலாநிதி.நிஹால் ஜினசேன.**

D.Tech (H.C), B.Tech (Eng). D.L.C. (Hons). C.Eng, F.I.E.S.L



**கலாநிதி.டி.எஸ் இராஜபக்ச**

MS (Sri Lanka); FRCOG (UK)

## மன்றத்தினதும் மற்றும் பதவியணியினதும் சுருக்க விவர அறிக்கை

**தேசிய விஞ்ஞான மன்றத்தின் பதவியணி.**

| | |
|---|---|
| **செயலாளர் :** | **எம்.சி.இராகபக்ச** |
| **கணக்காளர் :** | **என்.எஸ்.ஹேவாகம** |
| **விஞ்ஞான அலுவலர் :** | **எம் எஸ்.மலியாதே** |
| **உதவிக் கணக்காளர் :** | **எஸ்.கெ.கம்ஹேவா** |
| **கணக்கியல் உதவியாளர் :** | **எ.கெ.டி.எம்.பெரேரா.** |
| **நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்:** | **ஜி.எல்.ஆர்.எஸ் கருணாதிலக** |
| **சாரதிகள் :** | **கெ.கெ.டி. சந்தருவன்.** |
| **சாரதிகள்/காரியாலய உதவியாளர்கள்:** | **எ.டி.குணவர்தன.** |

# செயலாளர் அறிக்கை

உயர் தரமான விஞ்ஞானம் ஆராய்ச்சிக்கு தேசிய ரீதியிலாக நிதியீடு செய்யும் தேசிய ஆராய்ச்சி மன்றமானது, இலங்கையில் அதிமேதகு ஜனாதிபதியின் விசேட நெறிகாட்டலின் கீழ் முறை சார்ந்த ரீதியில் தாபிக்கப்பட்டது. அதனது செயற்பாடுகளாவன. தலைவரினாலும் மன்றத்தினாலும் ஆளுமை செய்யப்படுகிறது.

2011 ஆம் நிதியாண்டு காலப்பகுதியில், தேசிய ஆராய்ச்சி மன்ற ஆராய்ச்சி மானிய நிகழ்ச்சித் திட்டம் , பிஎச்டி/எம்பில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம், விஞ்ஞான ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டத்திற்கான ஜனாதிபதி விருது (PASR ), நிறுவன ரீதியிலான மீளாய்வு மற்றும் பொது விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டம் என்பன செயற்பாட்டில் இருந்தன. தேசிய ஆராய்ச்சி மன்றத்தினை பொறுத்த வரையில் இந்த வருடம் ஒரு விதி விலக்கான வருடமாகும். அதற்கு காரணமாக திரட்டப்பட்ட நிதியத்திலிருந்து உயர் அளவில் நிதியம் பெற்றுக் கொண்டமை, ஆராய்ச்சி மானிய நிகழ்ச்சித் திட்டத்திற்கு அதிகளவில் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமையும் அவற்றுள் 67 விண்ணப்பங்களுக்கு பிஎச்டி/ எம்பில் இணையுரிமைகள் வழங்கக் கூடியதாக இருந்தமை என்பனவற்றை கூறலாம்.

உயர் விஞ்ஞான அறிவுக்கும் சமூக பொருளாதார அபிவிருத்திக்கும் பங்களிப்பு செய்கின்ற 90 ஆராய்ச்சி கருத்திட்டங்களை தேசிய ஆராய்ச்சி மன்றம் நிர்வகிக்கின்றது, கண்காணிக்கின்றது மற்றும் மதிப்பீடு செய்கின்றது . பிஎச்டி/எம்பில் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பிலான இணையுரிமைகளை 13 இதிலிருந்து 80 ஆக அதிகரித்ததன் மூலம் இவ் வருடக்காலப்பகுதியில் அந்நிகழ்ச்சித் திட்டமானது மேலும் வினைத்திறன் கொண்டதாய் ஆக்கப்பட்டது PASR நிகழ்ச்சித்திட்டத்திற்காக விஞ்ஞானிகள் பற்றிய தகவல்கள் தொகுக்கப்பட்டன. ஜனாதிபதியின் செயலாளரினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையைத் தொடர்ந்து, விவசாயத்திணைக்களம் மீளாய்வு செய்யப்பட்டதுடன் அது தொடர்பிலான அறிக்கையானது, ஜனாதிபதி செயலகத்திற்கு கையளிக்கப்பட்டது.

இந்த வருடகாலப்பகுதியில் தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பல ஆராய்ச்சி அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கு தேசிய ஆராய்ச்சி மன்றம் நிதியீடு செய்தது. உதாரணமாக தேயிலையின் வளர் சிதை தன்மையினை ஆராய்தல், பாரம்பரியமற்ற பிரதேசங்களில் இறப்பரினை வளர்த்தல், குள்ள தெங்கின் மரபுரிமையில் ஆய்வு, உயிர் - பசளை, உரை- மொழி பெயர்ப்பு,எலும்பு பதியஞ்செய்தல், CKDU,Neonatal congenitl hypothyroidism ( பிறந்த 30 நாள் சிசுவின் கண்டக்கழலை இனை நுண்ணாய்வு செய்தல்) மூட்டை பூச்சிகளை கட்டுப்படுத்தல், குற்றங்களை கண்டுபிடித்தல், டெங்கு டொலமய்ட்டிற்கு பெறுமானம் சேர்த்தல்,CH4 வெளிப்பாடு என்பன அவற்றுள் சிலவாகும்.தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் பணிப்பாளையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள குறிக்கோள்களை சாதிப்பதற்கு நிதி மற்றும் மனித வளங்களின் உச்ச பயனை நாம் பாவிக்கின்ற அதே வேளையில்இலங்கையில் ஆராய்ச்சி சார்ந்த கலாச்சாரத்தை கட்டியெழுப்புவதற்குத் தமது ஆராய்ச்சி கருத்திட்டங்களின் ஊடாக அர்ப்பணிப்புடன் தமது பங்களிப்பினை வழங்கியதுடன் தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் செயற்பாடுகளுக்கும் தமது பூரண ஒத்துழைப்பை நல்கிய சகல விஞ்ஞானிகளுக்கும்எனது நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறேன். அத்துடன் உங்கள் ஒத்துழைப்பையும் ஆதரவையும் இதே போன்று எதிர்காலத்தில் என்றென்றும் வழங்குவீர்கள் என நான் நம்புகிறேன் " விஞ்ஞனிகளே எமது பலம் " என்பதை நான் உறுதியாக நம்புகிறேன்.: '

மேலும் தேசிய ஆராய்ச்சி மன்றத்தினை தம்மால் இயன்ற வரையில் உச்சத்திற்கு கொண்டு செல்வதற்கு பெறுமதி மிக்க தமது பங்களிப்பினை வழங்கிய மன்றத்தின் உறுப்பினர்கள், மற்றும் மன்றத்தின் வளர்ச்சிக்காக வருடகாலப்பகுதியில் தமது பூரண ஆதரவை வழங்கிய திறைசேரி மற்றும் தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சுக்கு நன்றி சொல்ல விரும்புகிறேன்.

தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் வருடாந்த அறிக்கையை சமர்ப்பிப்பதில் நான் மகிழ்ச்சியடைவதுடன் இந்த ஆண்டறிக்கையானது தேசிய ஆராய்ச்சி மன்றத்திற்கு பாராட்டுதலை பெற்றுக் தரும் என நம்புகிறேன்.

மனிஷா சி. இராஷபக்ஷ
நிறை வேற்று செயலாளர்

# எதிர்வரும்மூன்றுவருடங்களில்நிதிமுனைப்புகள்

**எதிர்வரும் மூன்று வருடங்களில் தொழிற்பாடு பெறுபேறுகை பற்றியமீளாய்வு**

| நிகழ்ச்சித்திட்டம் (திறமுறைகள்) | பௌதிக முன்னேற்றம் | | | | நிதி முன்னேற்றம் Rs. Mn | | |
|---|---|---|---|---|---|---|---|
| | காட்டிகள் | 2009 | 2010 | 2011 | 2009 | 2010 | 201 1 |
| தே.வி.மன்றத்தின் பொது நிர்வாகம் | | | | | 6.8 | 5.7 | 6.3 |
| | | | | | | | |
| கீழ்குறிப்பிடப்பட் ட நிகழ்ச்சித்திட்டங்க ளுக்கு அபிவிருத்தி உதவிகள் | | | | | 70.9 | 64.5 | 213. 9 |
| | | | | | | | |
| ஆராய்ச்சி மானியம் மற்றும் பி.எச்டி நிகழ்ச்சித்திட்டம் | ஆராய்ச்சி மானியங்களுக்கு தொரிவுசெய்யப்பட்டவி ண்ணப்பங்களின் எண்ணிக்கை.<br><br>பிஎச்டி/எம்பில் மாணவர்கள் | 22 ஆராய்ச்சி மானியங்கள் மற்றும் 47 விண்ணப்பங்களி ல் 07 பிஎச்டி மானியங்கள்<br><br>7 பிஎச்டி மாணவர்கள் | 74விண்ணப்பங்க ளில் 19 ஆராய்ச்சி மற்றும் பிஎச்டி மானியங்கள்<br><br>6 பிஎச்டி மானியங்கள் | 200 விண்ணப்பங்களி ல் 51 ஆராய்ச்சி மற்றும் பிஎச்டி மானியங்கள் வழங்கப்பட்டன.<br><br>32 பிஎச்டி மாணவர்கள் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டார்க ள் என்பதுடன் 48 பேர் பதிவு செய்யப்படல் வேண்டும். | | | |
| | | | | | | | |
| விஞ்ஞான ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களு க்கான ஜனாதிபதிவிருது | விழாக்கள் நடத்தப்பட்டன. விஞ்ஞானிகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. | ஆராய்ச்சியினை அடிப்படையாக கொண்ட தரவுகள் தொகுக்கப்பட்ட. விருதுபெறுநர்கள் களுக்கு விருது வழங்கலானது தொடரப்பட்டது. | 2003, 2004, 2005, 2006 என்பனவற்றை உள்ளடக்கும் வகையில் ஒரு நிகழ்ச்சித்திட்டம் நடைப்பெற்றதுட ன் 484 விஞ்ஞானிகளுக்கு ஜனாதிபதி விருதுவழங்கினார் . | 2007,2008,2009 ஆம் ஆண்டுகளில் விருதுகள் வழங்கப்பட்ட விஞ்ஞானிகள் தொடர்பிலான தரவுகள் தொகுக்கப்பட்ட துடன் அத்தொகுத்தல் பணியானது தொடர்ந்தும் செய்யப்பட்டது. | - | 0 | - |

# எதிர்வரும்மூன்றுவருடங்களில்நிதிமுனைப்புகள்

**எதிர்வரும் மூன்று வருடங்களில் தொழிற்படு பெறுபேறுகை பற்றியமீளாய்வு**

| நிகழ்ச்சித்திட்டம் (திறமுறைகள்) | பௌதிக முன்னேற்றம் | | | | நிதி முன்னேற்றம் Rs. Mn | | |
|---|---|---|---|---|---|---|---|
| | காட்டிகள் | 2009 | 2010 | 2011 | 2009 | 2010 | 2011 |
| | | | | | | | |
| நிறுவன ரீதியிலான மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டம் ஊடாக அபிவிருத்தி மற்றும் ஏனைய நிகழ்ச்சித் திட்டம் | பூரணப்படுத்தப்பட்ட நிறுவனங்கள்<br><br>பூரணப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் | தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி கண்காட்சிகள், 10 வருடவருடாந்த பிரசுரிப்பு என்பனவற்றில் பங்கு கொண்டதுடன் இதன்போது கருத்தரங்கும் இடம் பெற்றது. | விவசாய திணைக்களம் மீளாய்வு செய்யப்பட்டது.<br><br>தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி கண்காட்சிகளில், பங்கு கொள்ளல் தேசத்திற்கு விஞ்ஞானிகளை அறிமுகப்படுத்தல் | விவசாய திணைக்களம் மீளாய்வு செய்யப்பட்டதுடன், மீளாய்வு அறிக்கையானது ஜனாதிபதியின் செயலாளருக்கு சமர்பிக்கப்பட்டது.<br><br>தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி கண்காட்சிகளில், பங்கு கொள்ளல், இளம் விஞ்ஞானிகள் நிகழ்ச்சித்திட்டம் தொடங்கப்பட்டது. | - | - | - |
| **மொத்தம்** | | | | | 77.7 | 70.2 | 220.2 |

## பிஎச்டி மற்றும் ஆராய்ச்சி மானிய நிகழ்ச்சித்திட்டம்

- அறிமுகவுரை
- வருடகாலப்பகுதியில் முன்னேற்றம்
- வருடகாலப்பகுதியில் தொடங்கப்பட்ட புதிய மானியங்கள்.

# அறிமுகவுரை

## ஆராய்ச்சி மானிய நிகழ்ச்சித்திட்டம்

விஞ்ஞான ஆராய்ச்சி கருத்திட்டங்களுக்கான நிதியத்தை தேசிய ஆராய்ச்சி மன்றம் வழங்குகிறது. இலங்கையிலுள்ள அரச ஆராய்ச்சி அபிவிருத்தி அமைப்பாண்மைகளினை சார்ந்த எந்த ஒரு ஆராய்ச்சியாளர்களுக்கும் மானியம் வழங்கப்படுகிறது.




அரச ஆராய்ச்சி அபிவிருத்தி அமைப்பாண்மைகள் எனப்படுவது. பல்கலைக்கழகங்கள் மற்றும் அவற்றுடன் இணைக்கப்பட்ட கல்லூரிகள் அத்துடன் தனது பணிப்பாணையில் ஆராயச்சி தெரிவு ஒன்றினை கொண்டுள்ள எதேனும் அரச அல்லது குறை அரச அமைப்பாண்மைகள் ஆகும்.
அரச மானியங்களாவன வருடாந்தம் பொதுவாக வருட தொடக்கத்தில் விளம்பரப்படுத்தப்படுவதுடன் மன்றத்தினால் மதிப்பீடு செய்யபடுகிறது. மதிப்பீட்டு தகவுத்திறனிற்குள் விஞ்ஞான நோக்குகள், தேசிய அபிவிருத்தியில் ஆராய்வின் முக்கியத்துவம்,நாட்டில் விஞ்ஞான தொழில்நுட்ப செயற்திறனை வலுப்படுத்துதல் அரச மானியங்களுக்குரிய கருத்திட்டத்தின் பங்களிப்பு,மற்றும் சர்வதேச சஞ்சிகைகளில் ஆராய்ச்சி தேடல்களை பிரசுரிப்புற்கு உள்ள சாத்தியக்கூறுகள் என்பன உள்ளடங்கும்.

உயர் பெறுமானத்தை கொண்ட ஆராய்ச்சியானது, நாட்டின் அபிவிருத்தியின் செயலூட்டலிற்கு உயர் பங்களிப்பினை வழங்குகின்றது என்ற அடிப்படையில் மன்றத்தினால் மிகவும் துல்லியமான மதிப்பீட்டு செயன்முறைக்கு உட்படுத்தப்பட்டு தெரிவுசெய்யப்படும்.

தெரிவு செய்யப்பட்ட பிரேரணைக்கு, உரிய நிதி ஒதுக்கீடானது மன்றத்தினால் தெரிவு செய்யப்படும் என்பதுடன் இந்நிதியமானது இப்பிரேரணைக்குரிய கருத்திட்ட செயற்படுத்துகைக்கு பொறுப்புடைய முதல்நிலை முதலீட்டாளர்களுக்கு திறைசேரியின் ஊடாக வழங்கப்படும் நிதியங்களாவன கருவிகள்மற்றும் நுகர்வுகள் இதரவற்றை கருத்திற்கொண்டு வழங்கப்படும் .

சர்வதேச பிரசுரிப்புகளாவன அதிக தகைமை வாய்ந்த சர்வதேச விஞ்ஞானிகளால் மதிப்பீடு செய்யப்படுவதினால் மானியம் வழங்கப்படுவதில் வெற்றியின் அளவானது சர்வதேச சஞ்சிகைகளினால் மதிப்பீடு செய்யப்படுகின்றது (விசேடமாக sci சுட்டிலக்கமிடப்பட்ட சஞ்சிகைகள்) இதற்கு காரணம் ஆராய்ச்சிகளாவன சர்வதேச நியமங்களுடன் ஒத்திசையும் வகையில் முன்னெடுக்கப்படுகின்றதா என்பதை நிச்சயம் செய்து கொள்வதுடன் அத்தகைய உயர்தரத்தை எமது விஞ்ஞானிகள் எட்டிப்பிடித்தலை ஊக்குவித்தலாகும் .

இறுதியாக பொது மக்களுக்கு நேரடியான நன்மையினை பெறுபேறாக தரக்கூடிய கருத்திட்டங்களாவன பொது விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டத்திற்குள் உள்ளடக்கப்படும்.

## பிஎச்டி நிகழ்ச்சித்திட்டம்

ஒரு நாட்டின் விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத்தின் தகுநிலையும் கூட அந்நாட்டின் அபிவிருத்தி திறமையின் முதுகெலும்பாகும் இந்த உண்மையானது புதிதாக கைத்தொழில் மயமாகிய நாடுகளாவன தென் கொரியா , தாய்வான் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளினால் சாதிக்கப்பட்ட விரைவான அபிவிருத்தியின் மூலம் செய்கை முறை விளக்கமளிக்கப்பட்ட சான்றாக அமைகிறது. இந்த நாடுகள் இரசாயவியல், பௌதிகவியல், எண்கணிதம், உயிரியல், மருத்துவவிஞ்ஞானம், எந்திரவியல் விஞ்ஞானம் மற்றும் விவசாய விஞ்ஞானம் போன்ற அடிப்படை விஞ்ஞானத்தில் உயர் பயிற்சி வழங்கப்பட்ட விஞ்ஞானிகளை உருவாக்குவதற்கு (பிஎச்டி தரத்தில்) தமது மொத்த அபிவிருத்தி இலாபத்தில் அதிகளவு தொகையினை செலவிடுகின்றன. இதற்கு முரன்பாடாக இலங்கையின் முதலீடானது இத்தகைய துறைகளில் இந்நாடுகளுடன் ஒப்பிடும் போது பின்தங்கிய நிலையில் உள்ளது..

" புதிய இலங்கையினை நோக்கியதாய் மகிந்த சிந்தனை " பற்றி அதிமேதகு ஜனாதிபதியின் நோக்குக்கூற்றுக்கும் மற்றும் 2007 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவு திட்டத்தில் அபிவிருத்தின் முதல் பத்து ஆண்டு தொடர்பில் அறியச்செய்யப்பட்டவைகள் என்பவற்றுக்கு அமைவுற அபிவிருத்தியின் இந்தமுதல் பத்து ஆண்டில் 500 பிஎச்டி கற்கைகளை நிதியீடு  செய்வதற்கு ஏற்றுக்கொள்ளுதல், கண்கானித்தல் மற்றும் வெற்றிகரமாக பூரணப்படுத்தல் என்பவை தேசிய ஆராய்ச்சி மன்றத்தினால் செய்யப்படல் வேண்டும் என பிரேரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பல்கலைக்கழகங்கள் மற்றும் TRI,CRI,RRI, நாரா, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் போன்ற அரசதுறை ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனங்களிடையே கூட்டுறவினையும் கூட்டுழைப்பினையும் மேம்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அத்துடன் கனிஷ்ட விஞ்ஞானிகளுக்கு அரசதுறை நிறுவனங்களில் பிஎச்டி மட்டத்தில் பட்டப்பின் பயிற்சியினை வழங்குவதற்குரிய ஒரு திறமுறையினை இது வழங்குகிறது.

# வருடகாலப்பகுதியில் முன்னேற்றம்

## 2011 ஆம் ஆண்டின் 1 வது காலாண்டு

மேற் கூறப்பட்ட இரு நிகழ்ச்சித்திட்டங்களிலும் ஒரேவிதமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதினால் இரண்டும் ஒன்றாகவே கருதப்படுகின்றது .இரு தொகுதி விண்ணப்பங்களும் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரு தொகுதி விண்ணப்பமாக அறிமுகப்படுத்தப்பட்டது. இது விண்ணப்பதாரிக்கும் மதிப்பீட்டாளருக்கும் இலகுவான ஒரு முறையாக அமைந்தது.

விண்ணப்பங்களுக்கு அழைப்பு விடுத்தல் :- பத்திரிகை விளம்பரப்படுத்தல்களின் ஊடாக விளம்பரமானது சகல பல்கலைக்கழகங்கள், பீடங்கள் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவகங்களிடையே சுற்றுக்கு விடப்பட்டதுடன், எமது தரவுத் தளத்திலிருந்து மின்னஞ்சலானது சகல ஆராய்ச்சியாளர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.
பல்துறை அணுகு முறைகளுடன் கூடிய குழு ஆராய்ச்சி, கூட்டிணை ஆராய்ச்சி என்பன ஊக்குவிக்கப்பட்டது. இந்த விண்ணப்பங்களுக்கு அழைப்பு விடுக்கப்படும் போதுதொடக்க நிலை மானியங்களும் வழங்கப்பட்டது.இக்காலப்பகுதியில் விண்ணப்பங்கள் தொடர்பிலான சகல விசாரணைகளும் முறையாக இடம் பெற்றன.

**2011 ஆம் ஆண்டின் விண்ணப்பங்கள் தொடர்பில் முக்கிய தரவுகள்**

| | |
|---|---|
| பெறப்பட்ட மானிய விண்ணப்பங்கள் | 199 |
| பிஎச்டி/எம்பில் மாணவர்கள் | 270 |
| குழு ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம் | 135 |
| இணை - பரிசீலனையாளர்/கூட்டிணைவு | 254 |
| வெளிநாட்டு பங்குடமைகள் | 12 |

விண்ணப்பகளிண் முடிவுத்திகதி 2011,மார்ச் ஆகும். மொதத்மாக 199 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இந்த வருடத்தில் கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் முன்னைய வருடத்துடன் ஒப்பிட்டு பார்க்கையில் அதன் மூன்று மடங்கு ஆகும்.

நடப்பு மானியங்களின் கொடுக்கல் வாங்கல்களாவன மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன நடப்பு மானியங்கள் பற்றிய வருடாந்த முன்னேற்ற அறிக்கை மதிப்பீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஆராய்ச்சி பணியின் முன்னேற்றத்தை பற்றி அறிந்துக் கொள்ளும் பொருட்டு இவ்வருடகாலப் பகுதியில் பல மானியம் பெற்றுக் கொள்ளுனரை தலைவர் சந்தித்தார்.

**ஆராய்ச்சி தலைப்புகளில் முக்கியமானவை**

| மருத்துவம் | விவசாயம் | சக்தி/எந்திரவியல் | வனசூழல் | கணணி |
|---|---|---|---|---|
| டெங்கு | Mealybug | காற்றுச்சக்தி | நக்கிள்ஸ் | மொழி |
| மார்பு புற்றுநோய் | விதை கிழங்கு | சூரியசக்தி | விதை உயிரியல் | கடற்படையினர் பயிற்சி |
| Leishmaniasis | அரிசி வளர்ப்பு | படிமுறை எந்திரவியல் | திண் விரயம் | Policing |
| எலும்பு பதியஞ்செய்தல் | அரிசி பசளை | | Lightening | தொலைமருத்துவம் |
| CKD | இறப்பர் | | மெதானி கசிவு | |
| | தேயிலை | | உயிர் வாயுவாக்கி | |

மானியம் பெறுநரின் ஆய்வு கூடத்திற்கு விஜயம் செய்தல்:
தேசிய ஆராய்ச்சி மன்றத்தினால் நிதியீடு செய்யப்படுவதுடன் கண்டியிலுள்ள அடிப்படை கற்கைகள் நிறுவனம் பேராதெனிய பல்கலைக்கழகம் ஆகியவற்றிலுள்ள ஆய்வு கூடங்களுக்கு தலைவர் மற்றும் செயலாளர் விஜயம் செய்தனர்.

Leishmaniasis *(ஒட்டுண்ணியால் பரவும் ஒரு வித நோய்)* கருத்திட்டம் :

Leishmaniasis தொடர்பில் ஆராய்ச்சிகளை நடாத்துகின்ற இரு மானியம் பெறுநர்களை தலைவர் சந்தித்தார் இது, பொதுவான ஆராய்ச்சி பிரச்சனைகளில் பணியாற்றும் விஞ்ஞானிகளை ஒள்றாக சேர்ப்பதற்கே மேற்கொள்ளப்பட்டது. *Leishmaniasis* இருக்கினற பிரதேசங்களில் சில பொது விழிப்புணரச்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு ஒத்துக்கொண்டனர்.

## 2011 ஆம் ஆண்டின் 2வது காலாண்டு

*2011* ஆம் ஆண்டின் விண்ணப்பங்களாவன குறிப்பிட்டதுறையில் நிபுணத்துவம் உடைய ஏற்கனவே அறிந்தில்லாத இருவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது ஜுன் மாதம் 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் சந்தித்துக் கொண்ட மன்றமானது, விண்ணப்பங்களை மேலும் நுண்ணாய்வு செய்ததுடன் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததும் உயர் விஞ்ஞான தகைமைகளை கொண்டதுமான விண்ணப்பங்களை தெரிவு செய்தது.

நிதியீடு தொடர்பில் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை - 79
மீண்டும் சமர்பிக்கப்படுவதற்கு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 55
நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை - 64
மீண்டும் பெற்றுக்கொள்ளப்பட்டது - 01

சமர்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் 39% மானவையே தெரிவு செய்யப்பட்டதன தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் நிதியீட்டிற்காக திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

## 2011 ஆம் ஆண்டின் 3வது காலாண்டு

திறைசேரியானது 155 மில்லியனை விடுவிப்பு செய்ததுடன் 43 மானியங்கள் நிதியீடு செய்யப்பட்டது.

சட்ட ஆவணங்களும் வங்கி ஆவணங்களும் தாயரிக்கப்பட்டது.பின்னர் மானியக்கணக்கு திறக்கப்பட்டது சட்ட ஆவணங்களுக்கு கையொப்பமிடும் நாளில் சகல மானியம் பெறுனரையும் தலைவர் சாந்தித்தார் தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் மானியத்தின் தொழிற்படுத்துகை,தொடர்பில் சுருக்கமான ஒரு விளக்குவுரை சகல மானியம் பெறுநர்களுக்கும் வழங்கப்பட்டது

## 2011 ஆம் ஆண்டின் 4வது காலாண்டு

மிகுதி 20 மில்லியன் விடுவிப்பு செய்யப்பட்டதுடன் 08 மானியங்களுக்கு வழங்கப்பட்டன.

இக்காலப்பகுதியில் மொத்தமாக 53 பிஎச்டி/எம்பில் மாணவர்கள் தம்மை பதிவு செய்து கொண்டனர்.

# தேவையினை அடிப்படையாக கொண்ட உதவி நிகழ்ச்சித்திட்டம்

## 2011 ஆம் ஆண்டின் 1வது காலாண்டு

பரப்பெல்லைகளினை இனங்காணல் :-சமூகத்திற்கு நன்மைகளை வழங்குவதற்கு அனேகமான மானியங்களுக்கு மேலதிக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தேவைப்படுகின்றது விண்ணப்பங்கள் அழைக்கப்படுவதற்காக அவர்கள் புதிய பிரேரணைகளை 2011 ஆம் ஆண்டு சமர்ப்பித்தனர்.

**2011 ஆம் ஆண்டின் 2வது காலாண்டு**

Neonatal screening for conngenital Hypothyroidism (பிறந்த 30 நாள் சிசுவின் கண்டக்கழலை இனை நுண்ணாய்வு செய்தல்) ( மில்லியன் 3.1) தொடர்பிலும் மற்றும் structural health Monitoring of bridges ( மில்லியன் 10.5) தொடர்பிலும் நிதியீடு செய்யப்படுதலிற்காக இரு விண்ணப்பங்கள் தெரிவு செய்யப்பட்டன.

சுகாதார திணைக்களத்தின் சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம், neonatal screening for conngenital Hypothyroidism இனை இரத்த மதிப்பீட்டு தொழில்நுட்பத்தின் மூலம் தொடங்குவதற்கு கருமருத்துவ அலகு மற்றும் தேசிய ஆராய்ச்சி மன்றத்தினாலும் தொடங்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கும் தமது ஒத்துழைப்பை வழங்கும் படி ஒரு சுற்றறிக்கையின் ஊடாக தென்மாகாணத்திலுள்ள அரச நிறுவனங்களுக்கும் அறிவுறுத்தலை வழங்கினார்.

புத்தளயில் இடம் பெற்ற தேசத்திற்கு மகுடம் கண்காட்சியின் போது Neonatal screenig for congeniter Hypothyroidism இணை மொனராகல மாவட்டத்தில் அமுல் படுத்துகை செய்தல் தொடர்பிலான தொடக்கநிலை பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றன.

தேசிய ஆராய்ச்சி மன்றம் 11 - 160
"Establishment of national neonatal screening center for congenital hypothyroidism and to assess the predictors of newborn screening behavior of Sri Lankan mothers"

கலாநிதி மஞ்சுளா தேசப்பிரியா ஹெட்டி ஆராய்ச்சி
கரு மருத்துவ அலகு மருத்துவ பீடம்
ருஹுணு பல்கலைக்கழகம் ,த.பெ.இல.70 கராப்பிடிய, காலி.

தேசிய ஆராய்ச்சி மன்றம் 11 - 160
"Assessment, damage detection, life evaluation, repair and retrofitting of existing bridges in Sri Lanka due to overloading and environmental interaction"

பேரா.பி.பி.ஆர் .திசாநாயக
சிவில் எந்திரவியல் திணைக்களம்
பேராதெனிய பல்கலைக்கழகம் பேராதெனிய

சப்ரகமுவ மாகாணத்தில் structural heath monitoring of bridges முன்னெடுக்கப்படுவதற்கான தொடக்க நிலை நடவடிக்கைகள் தொடங்கப்பட்டதுடன் இவ்விடயம் தொடர்பிலான கோரிக்கையானது தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின் ஊடாக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு முன்வைக்கப்பட்டது..

**2011 ஆம் ஆண்டின் 3 வது மற்றும் 4 வது காலாண்டு**

மேற்கூறப்பட்ட இரு ஆராய்ச்சிகளையும் முன்னெடுப்பதற்கான நிதியம் விடுவிக்கப்பட்டது.

**அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப மற்றீடு நிகழ்ச்சித்திட்டம்.**

**2011 ஆம் ஆண்டின் 1 வது - 4 வது காலாண்டு**

வயம்ப பல்கலைக்கழகத்தில் உள்ள நெநோ தொழில்நுட்ப ஆய்வுக் கூடத்தை விருத்தி செய்வதற்கு பேராசியர் .சிஎ.என் பர்ணாந்துவிக்கு தேசிய ஆராய்ச்சி மன்ற மானியம் 07-29 இன் ஊடாக துணைமை வழங்கப்பட்டு அப்பணி எளிதாக்கப்பட்டது. இந்த நெநோ தொழில்நுட்ப ஆய்வுக்கூடத்தில் ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், இது பட்டம்பயிலும் மாணவர்களுக்கும் அத்துடன் பட்டப்பின்படிப்பு மாணவர்களுகும் நெநோ தொழில் நுட்பம் தொடர்பில் தமது அறிவினை மேம்படுத்தவும்

உதவுகின்றது.

அதிபலமைச் சொத்து கொள்கையினை விருத்தி செய்தல்- கைத்தொழில் தொழில் நுட்ப நிறுவகம் மற்றும் IDLO வினால் இணைந்த ஒழுங்கமைப்பு செய்யப்பட்ட " வளரச்சி மற்றும் சுபீட்சத்திற்கான அதிபுமைச் சொத்து உரிமைகள்".எனும் தலைப்பிலான பயிற்சிப்பட்டறையில் திருவதி.மனிஷா இராஜபக்ஷ மற்றும் திரு.சமந்த கம்ஹேவா ஆகியோர் பங்கு பற்றினர்.

# வருடகாலப்பகுதியில் தொடங்கப்பட்ட புதிய மானியங்கள்

| மானியம் இல | கருத்திட்ட தலைப்பு | முதன்மை முதலீட்டாளர் | நிறுவனம் |
|---|---|---|---|
| 11-004 | An investigation of the lightning environment in Sri Lanka | போரா.டி.யு.ஜெ. சொனன்தர | கொழும்பு பல்கலைக்கழகம் |
| 11-007 | Space-Time dynamics and parameters of growth of toxic cyanobacteria in Nuwara wewa and Nachchaduwa wewa in Anuradhapura. | பேரா.எ.வீரசிங்க | இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் |
| 11-011 | Genotoxicity assessment of surface waters of Kelani River and the industrial effluents reaching the river using different biological systems | பேரா.எ.பதிரட்ன | களனி பல்கலைக்கழகம் |
| 11-015 | Novel cardiovascular risk markers Paraoxonase ,Apolipoprotien A-1 (apoA- 1) and Glutathione Peroxidase genotype -1 in Coronary Artery Disease | பேரா.எச்.பீரிஸ் | ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| 11-022 | Investigations on endophytic diazotrophic bacteria and their inoculation effects on growth and nitrogen uptake of rice | கலாநிதி.என்.வெலிகல | களனி பல்கலைக்கழகம் |
| 11-023 | Metabolite Profiling of Tea Germplasm of Sri Lanka | கலாநிதி.பி.எ.என் புன்யசிரி | இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவகம் |
| 11-025 | Social Sensor Networks for Opinion Analysis | கலாநிதி.டி.என்.கெ.டி சொய்சா | கொழும்பு பல்கலைக்கழகம் கணணி பள்ளி |
| 11-029 | Data-driven Speech Translation between Sinhala and Tamil | கலாநிதி.எ.ஆர்.வீரசிங்க | கொழும்பு பல்கலைக்கழகம் கணணி பள்ளி |
| 11-034 | Molecular detection of toxigenic cyanobacteria, quantification of microcystin and exploiting microbial diversity to remove microcystin for water treatment solutions | கலாநிதி.எம்.எம். பத்மலால் | ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| 11-042 | Determination of the Genetic Architecture of Yellow (Dwarf) Coconut Populations in Sri Lanka | கலாநிதி.எஸ்.எ.சி.என். பெரேரா | தெங்கு ஆராய்ச்சி நிறுவகம் |
| 11-046 | one graft and bone substitutes for treating bone injuries, traumas, non-traumatic disorders. | பேரா.ஆர்,பி.வி.ஜெ.இ ராஜபக்ஷ் | பேராதெனிய பல்களைக்கழகம் |

| மானியம் இல | கருத்திட்ட தலைப்பு | முதன்மை முதலீட்டாளர் | நிறுவனம் |
|---|---|---|---|
| 11-051 | A study on the prevalence and clinico-pathological characterization of triple negative breast carcinomas and those with basal phenotype. | பேராசிரியர்.எம்.டி.எஸ். லொகுஹெட்டி | கொழும்பு பல்கலைக்கழகம் |
| 11-053 | Synthesis, characterization and study of physico-chemical properties of some polymeric materials in the form of nanofibres and their applications in antimicrobial polymer nanofibre water filters and dye-sensitized solar cells. | பேராசிரியர்.சி.பி.திசா நாயக்க | அடிப்படை கற்கைகள் நிறுவகம் |
| 11-054 | Development of electrochemical technologies to remove organic and heavy metal pollutants present in pesticides | கலாநிதி.கெ.ஜி.என்.நாணயக்கார | அடிப்படை கற்கைகள் நிறுவகம் |
| 11-056 | Application of Biofilm-Biotechnology for biofuel production, novel biofertilizer development and amelioration of environmental pollution | பேராசிரியர்.ஜி. செனவிரட்ன | அடிப்படை கற்கைகள் நிறுவகம் |
| 11-059 | Gene expression analysis: Identifying the missing link in chronic kidney disease of unknown aetiology (CKDu) in Sri Lanka | கலாநிதி.டி.என்.மகனா ஆராய்ச்சி | அடிப்படை கற்கைகள் நிறுவகம் |
| 11-065 | Vidusayura - A perception enhanced immersive virtual environment for maritime education. This is a tailor-made Virtual Reality (VR) solution for Sri Lanka Navy(SLN) | பே.என்.டி கொடிகார | கொழும்பு பல்கலைக்கழகம் கணணி பள்ளி |
| 11-066 | Accuracy, Convenience and Benefits of treating Patients in an eClinic using the Vidusuwa Telemedicine Solution in a Sri Lankan Context | கலாநிதி.எஸ்.எம்.கெ.டி. அருணாதிலக | கொழும்பு பல்கலைக்கழகம் கணணி பள்ளி |
| 11-067 | Development of Assistive Robotic Arms | ஆர்.எ.ஆர்.சி. கொபுர | மொறட்டுவ பல்கலைக்கழகம் |
| 11-071 | Intelligence Led Policing Using Data Mining Techniques | கலாநிதி.பி.ஆர்.பு. யாப்பா | பேராதெனிய பல்கலைக்கழகம் |
| 11-072 | Towards Better Performance: Development of an Automated Tool for Performance Evaluation in Sports using Trajectory Analysis. | கலாநிதி.யு.எ.ஜெ,பின்டி ஆராய்ச்சி | பேராதெனிய பல்கலைக்கழகம் |
| 11-075 | Viral aetiologies of encephalitis in a hospital-based patient population in Sri Lanka | கலாநிதி.டி.சேங் | கொழும்பு பல்கலைக்கழகம் |
| 11-080 | A. Investigation of gastrointestinal parasitic infection in goats in North Western Province and implementation of genetic and immunological intervention | திரு.பி.எ.காமிக | இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் |
| 11-087 | Identification of genomic regions associated with phosphate deficiency tolerance in Sri Lankan rice germplasm for marker assisted breeding | கலாநிதி எஸ்.டி.எஸ்.எஸ். சூரியாபதிரன | பேராதெனிய பல்கலைக்கழகம் |
| 11-091 | Dormancy and germination requirements of seeds of some dominant mountain forest species in Sri Lanka, and possible effects of climatic change | கலாநிதி.கெ.எம்.ஜி.ஜி. ஜயசூரியா | பேராதெனிய பல்கலைக்கழகம் |

| மானியம் இல | கருத்திட்ட தலைப்பு | முதன்மை முதலீட்டாளர் | நிறுவனம் |
|---|---|---|---|
| 11-093 | The psychological impact of spinal cord injury; Long term difficulties and coping strategies | கலாநிதி.எஸ்.வில்லியம்ஸ் | களனி பல்கலைக்கழகம் |
| 11-099 | Molecular identification of Ralstonia solanacearum (E.F.Smith) in seed potato. | கலாநிதி.பி.என்.தசநாயக்க | ஸ்ரீஜவர்தனபுர பல்கலைக்கழகம் |
| 11-106 | Assessment, damage detection, life evaluation, repair and retrofitting of existing bridges in Sri Lanka due to over-loading and environmental interaction | கலாநிதி.பி.பி.ஆர் திசாநாயக்க | பேராதெனிய பல்கலைக்கழகம் |
| 11-116 | Selection and evaluation of potential egg parasitoids for biocontrol of Cnaphalocrocis medinalis, Rice leaf folder. | கலாநிதி.கெ,எஸ்.ஹேமச்சந்திர | பேராதெனிய பல்கலைக்கழகம் |
| 11-118 | Effect of soil amendment with silicon on preharvest fungal disease and postharvest quality of bitter gourd | கலாநிதி.டபிள்யு.எ.எம். டவுன்டசெகர | பேராதெனிய பல்கலைக்கழகம் |
| 11-120 | Establishment of native tree islands in man-made grass-lands at the Knuckles Forest Reserve, Sri Lanka. | கலாநிதி.எ.எம்.டி.எ. குணரட்ன | பேராதெனிய பல்கலைக்கழகம் |
| 11-121 | Effectiveness of multi strain Rhizobial inoculants for edible legumes of Sri Lanka | கலாநிதி.சி.எல்.அபயசேகர | பேராதெனிய பல்கலைக்கழகம் |
| 11-122 | Characterization of the antibacterial activity of Triphala, a commonly used Ayurvedic product, against multi-resistant human pathogens | பேரா.வி.தவனேசன் | பேராதெனிய பல்கலைக்கழகம் |
| 11-125 | Empowering rubber farmers in non-traditional rubber growing areas through knowledge on combating adverse impacts of environment for better productivity | கலாநிதி.எல்.சமரபுள்ளி | இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவகம் |
| 11-129 | Dengue virus dynamics/genetic changes in the vector mosquitoes and geo-climatic factors that predict clinical severity of dengue fever (DF), dengue haemorrhagic fever (DHF) and DF/DHF outbreaks | கலாநிதி.எப்.நூர்மீன் | பேராதெனிய பல்கலைக்கழகம் |
| 11-142 | Assessment of heavy metal pollution in sediments and surface soils in the Colombo Metropolitan Region | கலாநிதி.எச்.எம்.டி.ஜி.எ. பிடவல | பேராதெனிய பல்கலைக்கழகம் |
| 11-148 | Methane (CH4) and nitrous oxide (N2O) emission from six rice varieties as governed by soil microbial communities, rhizosphere characteristics and agronomic practices | பேராசியர்.ஆர்.எம்.சி.பி .இராஜபக்ஷ | பேராதெனிய பல்கலைக்கழகம் |
| 11-152 | A Study on Design of Domestic Type Machine for De-polymerizing Solid Waste of Polythene and Plastic Bottle | கலாநிதி.என்.கெ.ஹெட்டி ஆராய்ச்சி | ருஹுணு பல்கலைக்கழகம் |
| 11-157 | Development of Breakthrough Technologies Relevant to Polymer Composites | கலாநிதி.எல்.எ.பனம்கம் | ருஹுணு பல்கலைக்கழகம் |

| மானியம் இல | கருத்திட்ட தலைப்பு | முதன்மை முதலீட்டாளர் | நிறுவனம் |
| --- | --- | --- | --- |
| 11-158 | Anaerobic Co-digestion of Rice Straw and Organic Fraction of Municipal Solid Waste for the Enhancement of Biogasification through Physicochemical Adjustments | கலாநிதி.எஸ். விஜயதுங்க | ருஹுணு பல்கலைக்கழகம் |
| 11-160 | Establishment of national neonatal screening center for congenital hypothyroidism and to assess the predictors of newborn screening behavior of Sri Lankan mothers | கலாநிதி.எம்.டி.ஹெட்டி ஆராய்ச்சி | ருஹுணு பல்கலைக்கழகம் |
| 11-166 | Investigation of background concentrations and spatial distribution of Heavy metals in surface soils and crops in agricultural fields in Sri Lanka | பேரா.எஸ்.பி. இந்திராரட்ன | பேராதெனிய பல்கலைக்கழகம் |
| 11-175 | Improving the performance of hybrid nanocrystalline titanium dioxide ($TiO_2$) / polymer solar cell using interface modifiers | பேரா.பி.ரவிராஜன் | யாழ்ப்பாண பல்கலைக்கழகம் |
| 11-176 | Establishment of Indian sandalwood (Santalum album) plantations and determination of the variation of oil contents in different geographical regions of Sri Lanka | கலாநிதி.எஸ்.எம்.சி.யு. பி.சுபசிங்க | ஸ்ரீஜவர்தனபுர பல்கலைக்கழகம் |
| 11-178 | synthesis of value added products from Sri Lankan dolomitic marbles | கலாநிதி.டி.ஜி.ஜி.பி.கரு ணாரட்ன | பேராதெனிய பல்கலைக்கழகம் |
| 11-179 | Investigation of phosphorus and potassium nutrition of lowland rice crops in Sri Lanka to increase their nutrient use-efficiency. | கலாநிதி.எல்.டி.பி.சூரிய கொட | பேராதெனிய பல்கலைக்கழகம் |
| 11-180 | Petrogenesis and geochronology of ultra high temperature granulites from the Highland Complex of Sri Lanka | கலாநிதி.எம்.எ.எஸ்.பி. கெ.மலவி ஆராய்ச்சி | பேராதெனிய பல்கலைக்கழகம் |
| 11-192 | Bionomics of mealybug species of the low country dry zone, Sri Lanka and their potential threats to the agriculture. | கலாநிதி.எம்.வினோபா பா | கிழக்கு பல்கலைக்கழகம் |
| 11-193 | Retrofitting of Existing Masonry Building for Dynamic Load induced by Natural Hazards | கலாநிதி.ஜி.எஸ்.வை.யு. சில்வா | ருஹுணு பல்கலைக்கழகம் |
| 11-195 | Studies on possibilities of Biofuel production through selected Algae species available in Sri Lanka | பேராசிரியர்.எஸ்.சுபசிங் க | ருஹுணு பல்கலைக்கழகம் |
| 11-196 | Fabrication of efficient low cost photo-electrochemical solar cells using novel gel/solid polymer electrolytes and | கலாநிதி.டி.எம்.வை.ஜெ .பண்டார | இலங்கைரஜரட்ட பல்கலைக்கழகம் |

## செயற்பாட்டில் உள்ள நிழ்ச்சித் திட்டங்கள்

### விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கு ஜனாதிபதி விருதுகள்

- அறிமுகவுரை
- வருடகாலப்பகுதியில் முன்னேற்றம்.

# அறிமுகவுரை

இலங்கை விஞ்ஞானிகள் சர்வதேசதரத்தை சாதித்தமையை கௌரவிக்கும் முகமாகவும் மற்றும் தேசிய விஞ்ஞான உற்பத்தியினை அதிகரிக்கும் முகமாகவும் 2001 ஆம் ஆண்டு விஞ்ஞான ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கான ஜனாதிபதி விருது வழங்கல் தொடங்கப்பட்டது .

இந்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்பிலான முழுத்திட்டமும் விஞ்ஞான பிரமாணக்குறியீட்டு சுட்டியினை அடிப்படையாகக் கொண்டது விஞ்ஞான பிரமாணக்குறியீட்டு சுட்டியானது 100 வகையான துறைகளினை உள்ளடக்கிய விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப சஞ்சிகைகளிலிருந்து முக்கிய தரவுகளை தெரிவு செய்து கிட்டத்தட்ட 3700 இற்கும் அதிகமான தரவுகளைக்கொண்டதாகவுள்ளது .

விஞ்ஞான ஆராய்ச்சிக்கான ஜனாதிபதி விருது திட்டமாது இலங்கை விலாசத்துடன் கூடிய சகல " கடினமான " விஞ்ஞான தலைப்புக்களையும் உள்ளடக்கியுள்ளது.(சமூக விஞ்ஞானம் தவிர்ந்த) .

இந்த வருடம் ஜனாதிபதி விருதின் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளாவன 2007,2008, மற்றும் 2009 ஆம் வருடத்திற்கு பூரணப்படுத்தப்பட்டுள்ளது. இந்த மூன்று வருடங்களிலும் பெறப்பட்ட 573 பிரசுரிப்புக்களில் 745 இலங்கை விஞ்ஞானிகள் இனங்காணப்பட்டனர். ஒவ்வொரு விஞ்ஞானிகளுக்குமான தனிப்பட்ட திரட்டு சுட்டியும் மற்றும் நிறுவகத்திற்குமான தனிப்பட்ட திரட்டு சுட்டியும் பூரணப்படுத்தப்பட்டது. சகல பிரித்தெடுப்புக்களுடன் கூடிய நோக்கல் புத்தகம் பூரணப்படுத்தப்பட்டது.

# 2011 ஆம் வருட காலப்பகுதியில் முன்னேற்றம்

## 2011 ஆம் ஆண்டின் 1வது காலாண்டு

விஞ்ஞான ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கான ஜனாதிபதி விருதானது விஞ்ஞான பிரமாணக்குறியீடு சுட்டியினையே முற்றுமுழுதாக சார்ந்துள்ளது விஞ்ஞான பிரமாணக்குறியீடு சுட்டி எனப்படுவது ஒரு தரவுத்தளமாகும். அத்தரவுத்தளமானது தரம் மற்றும் விஞ்ஞானத்தில் உயர் பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய உலக விஞ்ஞான சஞ்சிகைகள் அந்த சஞ்சிகைகளின் பிரசுரிப்பாளரினால் மிகு உயர் தரத்தில் உள்ளவை என மதிப்பீடு செய்யப்படின் அத்தகைய சஞ்சிகைகளில் உள்ள விடயங்களை உள்ளடக்கி ஆக்கப்பட்டது. மேலும் இந்த விஞ்ஞான பிரமாணக்குறியீட்டு சுட்டியினை பகுப்பாய்வு செய்ததில் இந்த சுட்டியானது கிட்டத்தட்ட 3800 சஞ்சிகைகளிலிருந்து 1,200,000 தலைப்புக்களுக்கும் அதிகமான ஆக்கங்களிலிருந்து சொற்களை உள்ளடக்கியுள்ளது

இலங்கையில் விஞ்ஞான பிரமாணக் குறியீட்டுச் சுட்டியினை நோக்குவதற்கு விஞ்ஞான பிரமாணக்குறியீடு தரவுத்தள இறுவட்டினை கொள்வனவு செய்தல் வேண்டும். அல்லது தொடறரா தரவுத்தளத்தில் நுழைதலின் மூலம் பெற்றுக் கொள்ளலாம். இலங்கையில் விஞ்ஞான பிரமாணகுறியீட்டு சுட்டி இறுவட்டானது இலங்கை தேசிய நூலகத்தில் மட்டுமே உள்ளது. இதனை நோக்கலிக்கு மட்டுமே பயன்படுத்தலாமே தவிர இரவல் செய்ய முடியாது. இதற்கு காரணம் இந்த இறுவட்டின் பதிப்புரிமை தொடர்பில் உயர் செலவினம் செய்யப்பட்டுள்ளது என்பதாலேயே ஆகும்..

2007,2008, மற்றும் 2009 ஆம் ஆண்டிற்குரிய மொத்த பிரசுரிப்புக்களின் எண்ணிக்கை முறையே 274,318 மற்றும் 300 ஆகும். இலங்கை நிறுவனமொன்றின் விலாசத்துடன் (தனியாக அல்லது கூட்டாக) விஞ்ஞான பிரமாணக்குறியீட்டில் உள்ளடக்கியுள்ள பிரசுரிப்புகளே விருதுக்கு உரியனவாக கருதப்படும்.

## 2011 ஆம் ஆண்டின் 2வது காலாண்டு

தரவுத்தள விருத்தியானது செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது . கீழ் குறிப்பிடப்பட்ட நடவடிக்ககை முன்னெடுக்கப்பட்டது.

பெயர் குறிப்பீடு செய்தலிற்கு பிரசுரிப்புகளை தெரிவு செய்தல்

ஆராய்ச்சி விருது திட்டத்திற்கு முன்னெடுக்கப்பட்ட தொகுப்பிற்குள் (சமூக விஞ்ஞானம் நீங்கலாக) சகல " கடினமான " விஞ்ஞான தலைப்புகளும் உள்ளடங்கப்படும் என்பதுடன் இலங்கை பிரமாணக் குறியீடு சுட்டியில் தரப்பட்டது போன்று ஆகக்குறைந்தது ஒரு எழுத்தாளராவது இலங்கை விசாலத்தை கொண்டிருத்தல் வேண்டும்.பொருட்படுத்தக்குரியதன்று என மதிப்பீடு செய்யப்பட்ட பிரமாணக் குறியீட்டிலிருந்து நீக்கப்பட்ட பிரசுரிப்புக்களாவன ஆராய்ச்சிக்கு உட்படுத்தலானது தடை செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக கூட்டத்தின் அபிப்பிராயக்கள், கடிதப் போக்குவரத்துகளும் அதற்கான பதில்களும்,மற்றும் உணமையிலேயே ஆராய்ச்சிக்கும் மற்றும் நோக்கறைகும் உட்படுத்தப்படாத தகவல்கள். இவ்விடயம் தொடர்பில் எடுக்கப்பட்ட முதல் சட்ட நடவடிக்கையானது, இலங்கை விலாசத்துடன் கூடிய பிரசுரிப்புகளை தரவுத்தளத்திருந்து வேறுபடுத்தும் பொருட்டு விஞ்ஞான பிரமாணக்குறியீடு சுட்டி தரவுத்தளமானது நுண்ணாய்வு செய்யப்படல் ஆகும். நுண்ணாய்வு செய்யப்பட்ட தரவுப் பதிவுகளாவன, ஆராய்ச்சி விருதுகள் வழங்கப்படுதலிற்காக பிரசுரிப்புகளின் தரவுத்தளத்தை விருத்தி செய்ய பயன் படுத்தப்பட்டது.

SCI CD can be search for :

தலைப்புச் சொல்
எழுத்தாளர் பெயர்
குறிப்பிடப்பட்ட அத்துறையின் எழுத்தாளர்/நோக்கல்
விலாசம்
முழு சஞ்சிகை தலைப்பு
சஞ்சிகைத் தலைப்பின் சுருக்கம்.

ஒவ்வொரு தேடலிற்கும் கீழ்குறிப்பிடப்பட்ட தகவல்கள் தரவுத்தளத்திவிருந்து இறக்கம் செய்யப்படும் (விஞ்ஞான பிரமாணக் குறியீட்டு சுட்டி பட்டியல்).

| நடப்புவாசகம் | பரிந்துரைக்கப்பட்ட வாசகம் | தீர்மானம் |
|---|---|---|
| விலாமானது, இலங்கை நிறுவனமொன்றின் விலாசமாக இருப்பின் ஒவ்வொரு பிரசுரிப்பிற்கும் 2.0 சுட்டி ஒதுக்கீடு செய்யப்படும். | அதே வாசகம் பிரயோகிக்கப்படல் வேண்டும் | √ |
| விலாசமானது, வெளிநாட்டு நிறுவனமொன்றின் விலாசமாக இருப்பின் ஒவ்வொரு பிரசுரிப்பிற்கும் சுட்டி 1.0 ஒதுக்கீடு செய்யப்படும். | 2008 ஜனவரி 11ஆம் திகதி இடம் பெற்ற 17 வது மன்றக் கூட்டத்தின் போது,விஞ்ஞான ஆராய்ச்சியில் வெளிநாட்டு கூட்டுழைப்பை ஊக்குவிக்கும் முகமாக வெளிநாட்டு நிறுவனங்களின் விலாசத்தை உடைய பிரசுரிப்பிற்கு 1.5 சுட்டி கொடுக்கப்படல் வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டிற்குரிய விருதுகளிலிருந்து இது அறிமுகப்படுத்தப்படவுள்ளது. | √ |
| அதிக பொருட்படுத்துவ தற்குரியனவல்ல என மதிப்பீடு செய்யப்பட்ட கடிதங்களும் ஆராய்ச்சிக் குரியதற்ற பிரசுரிப்புகளும் நீக்கப்பட்டன. | ஆக்கங்கள் மட்டுமே கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.சகல மீளாய்வுகள் /கடிதங்கள்/கூட்டங்களின் இடம் பெற்ற விடய பிரித்தெடுப்புகள் இதர நீக்கப்படல் வேண்டும்.(2003 இலிருந்து 2006 வரைக்குமுள்ள விருதுகளில் இந்தகைய பிரிசுரிப்புகள் 12 உள்ளன) | ஆராய்ச்சி அல்லாத ஆக்கங்கள் நீக்கப்படல் வேண்டும். |
| எழுத்தாளர் சுட்டியினை கணிப்பீடு செய்தல் பொருட்டு ஒவ்வொரு பிரசுரிப்புகளுடன் இணைக்கப்பட்ட சகல எழுத்தாளர்களுக்கிடையேயும் சுட்டி சமமாக பகிரப்பட்டது. | அதே வாசகம் பிரயோகிக்கப்படல் வேண்டும் | √ |
| வெளிநாட்டு உள்ளூர் நிறுவகத்துடன் இணைக்கப்படுள்ள வெளிநாட்டு எழுத்தாளர்கள் விருதுக்கு உரியவர்கள் அல்ல | அதே வாசகம் பிரயோகிக்கப்படல் வேண்டும் | √ |
| விருதுகள் பெற்று கொள்ளப்படல் வேண்டுமாயின் அதற்கான தகைமையில் ஒன்று குறிப்பிட்ட நபர் தமது செயற்பாடுகளை அடுத்தவரும் டிசம்பர் வரையில் இலங்கையில் மேற்கொள்ளுதல் வேண்டும்.இந்த வாசமானது ஆராய்ச்சியாளர்களை இலங்கையில் தங்கச் செய்தலினை ஊக்குவிக்கும்.(இலங்கை நிறுவகத்திலிருந்து பிரசுக்கப்பட்டது) | பட்டப் பின்படிப்பு கற்கையைத் தொடர,தொழில் வாய்ப்பு,குடியகல்வு,வருகை விஞ்ஞானிகள்,இருபக்க குடியுரிமை மேற்கல்விக்கு போன்ற வேறுபட்ட காரணங்களினால் விஞ்ஞானிகள் புலம் பெயருவதனால் நிச்சயமற்ற நிலைமை உருவாகியுள்ளது. இது போன்ற காரணங்களால் சில விஞ்ஞானிகள் பட்டியலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். ஆனால் சில வருடகளுக்கு பின்பு அவர்கள் மீண்டும் நாட்டிற்கு வந்து அரச துறையில் அல்லது வருகை விஞ்ஞானிகளாக தொழில் வாய்பபினை பெற்றுக் கொண்டு சான்றிததழ்க்கு கோரிக்கை விடுக்கின்றனர். ஆதலினால் நடப்பு வாசம் நீக்கப்படல் வேண்டும். | × |
| வெளிநாட்டு நிறுவனத்துடன் இணைந்து பிரசுரிக்கும் ஒரு இலங்கையர் (இலங்கையராக இருக்கலாம் இல்லாது இருக்கலாம்) நீக்கப்படல் வேண்டும். | தற்பொழுது வெளிநாட்டில் வதியும் இலங்கையரை இலங்கையில் பணியாற்றுவதற்கு அரச ஊக்குவிக்கின்றது. ஆதலினால் சர்வதேச கூட்டுழைப்பு ஆராய்ச்சி ஊக்குவிக்கப்படல் வேண்டும். வெளிநாட்டு நிறுவனத்துடன் இணைந்து பிரசுரிக்கும் ஒரு இலங்கையர் (இலங்கையராக இருக்கலாம்.இவ்வாறு இருக்கலாம்) விருதுக்கு உரியவையாக கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். | × |

எழுத்தாளர் பெயர்
தலைப்பு
முழு விடயம்
மொழி
ஆவணவகை
ids/புத்தக இலக்கம்

தொடர்பிடைய தரவுகளின் எண்ணிக்கை
தொடர்பிடைய குறிப்புதவிகளின் எண்ணிக்கை

<u>விஞ்ஞான பிரமாணக்குறியீடு சுட்டியிலிருந்து உதாரணங்கள்</u>

" பதிவு 1 இலிருந்து 241 வரையில்

**எழுத்தாளர்கள்** : சிபயாமா - டி ஆஸ்டொன் - திருமதி. சிங்ககுமார - பு கிரிஸ்கொம் - எச் பி எதிரிவீர - எஸ் கிரிஸ்கொம் - பிடபிள்யு.
**தலைப்பு :** EFFECTS OF FIRE ON THE RECRUITMENT OF RAIN-FOREST VEGETATION BENEATH PINUS-CARIBAEA PLANTATIONS, SRI-LANKA
**சுருக்கமூலம் :** FOREST ECOL MANAGA 2007 தொகுதி 226,755 1-3,11357 - 363
**ஆவண வகை :** ஆக்கம்.
**தொடர்புடைய குறிப்பிலக்கங்களின் எண்ணிக்கை:** 24
**விலாசம்** : யாலே பல்கலைக்கழகம்,SCH வனவியல் மற்றும் சூழலியல் ஆய்வு, நியு ஹெவன், CT 06511,அமெரிக்க ஜக்கி இராச்சியம்.ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகம், வனவியல் மற்றும் சூழலியல் திணைக்களம் SCI ,நுகேகொட, ஸ்ரீலங்கா"

இலங்கை விலாசங்களை உடைய சகல பிரசுரிப்புகளும் விருதுக்குரியவாக கருதப்படாததினால் முற்றும முழுதானதொரு ஆராய்ச்சி ஆக்கத்தினை பெற்றுக் கொள்வதற்கு தரவுகள் மீண்டும் நுண்ணாய்வு செய்யப்பட்டன. ஆதலினால் மன்றத்தினால் நடுவர்களாக பெயர் குறிப்பீடு செய்யப்பட்டவர்களுக்கு உண்மையான ஆராய்ச்சி இயல்பிணை கொண்ட ஆக்கங்களை தெரிவு செய்யும் பொருட்டு பட்டியல் வழங்கப்பட்டது.நடுவர்களால் உரிய முறையில் நுண்ணாய்வு செய்யப்பட்டு பொருத்தமற்றவை நீக்கப்பட்டு அதன் பின்பு விருதுக்கு ஏற்புடையதாய் சில ஆக்கங்கள் அங்கீகாரம் பெறப்பட்டன. நடுவர்களால் வழங்கப்பட்ட தீர்ப்பே இறுதியானது.

## <u>2011 ஆம் ஆண்டின் 3வது காலாண்டு</u>

எழுத்தாளர்களை இனங்காணுதல்

விஞ்ஞான பிமாணக்குறியீடு சுட்டியனது எழுத்தளர்கள் பெயர்கள் மற்றும் அவர்களின் விலாசங்களை மிகச் சிறிய அளவில் எழுந்தமாறியாக தரும்.அத்துடன் எழுத்தாளர் எதனுடன் இணைக்கப்பட்டுள்ளார் என்பதை இனம் காண்பதற்கு எழுத்தாளரின் பெயர் மற்றும் விலாசங்களை இணைத்து தொடர்பு படுத்த முடியாது. ஆதலினால் எழுத்தாளர் எதனுடன் இணைக்கப்பட்டுள்ளார் என்பதை இனம் காண்பதற்கு ஒரு தனிப்பட்ட செயன்முறை தேவைப்படுகிறது.

பிரசுரிப்புகள் தெரிவு செய்யப்பட்ட பின்னர் பிரசுரிப்பின் முழுத்தொகுதி ஆவணமும் சேகரிக்கப்பட்டது. எழுத்தாளார்கள் எதனுடன் இணைக்கப்பட்டுள்ளார்கள் எனத் தேர்வாராய்வு செய்வதற்கு இதுவே மிகவும் பாதுகாப்பான முறையாகும். ஏதேனும் முறையில் அதாவது தொடறரா முறையின் மூலமோ அல்லது பிரதிகளை பெற்றுக் கொள்வதன் மூலமோ முழுத் தொகுதி ஆவணமும் பெற்றுக் கொள்ளப்படின் அதுவே எழுத்தாளர் எதனுடன் இணைக்கப்பட்டுள்ளார் என்பதை இனங்காண்பதற்கு இலகுவான முறையாகும்.

ஒரு சில ஆக்கங்களை பொறுத்தவரையில் அதன் முழுத்தொகுதி ஆவணத்தை இலகுவாக தொடறரா முறையில் மூலம் பெற்றுக் கொள்ளலாம். வேறு சில ஆக்கங்களின் முழுத் தொகுதி ஆவணத்தை இலங்கை நூலகங்களில் பெற்றுக் கொள்ளலாம். வேறும் சில ஆக்கங்களாவன எழுத்தாளர்களிடம் கோரிக்கை விடுத்து மின்னஞ்சல் முறையின் மூலம் பெற்றுக் கொள்ளலாம். எஞ்சியுள்ள ஆக்கங்கள் ஒன்றில் கொள்வனவு செய்யப்படல் வேண்டும். அல்லது இரவல் பெறப்படல் வேண்டும். மேற்கூறப்பட்ட முறைகளை பின்பற்றுவதன் மூலம் எழுத்தாளர் எதனுடன் இணைக்கப்பட்டுள்ளார் என்பதை இனங்காணுதல் முடியும்.

எழுத்தாளர்களை இனங்காணுதல் 100% துல்லியமாக இருத்தல் வேண்டும் :- எழுத்தாளர்களின் பெயர்களை விருது ஒன்று வழங்கப்படுவதற்குரிய பட்டியலில் சேர்க்கப்படும் போது தகுதி நிலைத் தகவுத்திறன் கடுமையாக பின்பற்றப்படும். ஒரேவிதமான பெயர்களையும் அது போன்று ஒரே விதமான முதலெழுத்துக்களையும் கொண்ட ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்தாளர்கள் இருக்கலாம்.சிலர் தமது முதலெழுத்துளை வேறு விதமாக மாற்றலாம்.
அது போன்று ஒரு சில எழுத்தாளர்களின் பெயர்கள் இலங்கை பெயராக இருப்பினும் வெளிநாட்டு நிறுவகங்களுடன் இணைக்கப்பட்டவர்களாக இருக்கலாம். அல்லது வேறு ஒரு வெளிநாட்டின் குடியுரிமையினை பெற்றவராகவும் இருக்கலாம் . ஆகவே இவ்விடயம் தொடர்பிலான செயன் முறையானது மிகவும் கவனமாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**2011 ஆம் ஆண்டின் 4வது காலாண்டு**

திரள் சுட்டியினை கணிப்பீடு செய்தல்

விஞ்ஞானிகளை வரிசைப்படுத்துதல் மற்றும் சன்மானம் காசாக வழங்கும் போது (வழங்கலாம் வழங்கப்படாதும் இருக்கலாம்) அதனைக் கணிப்பீடு செய்தல் போன்ற விடயங்கள்தொடர்பில் திரள் சுட்டியானது ஒவ்வொரு விஞ்ஞானிகளுக்கும் கணிப்பீடு செய்யப்படும்.

ஒரு குறிப்பட்ட ஒரு வருடத்தில் விஞ்ஞான பிரமாணக் குறியீட்டு சுட்டி ஒன்றில் இருக்கின்றதும் அது போன்று இலங்கை நிறுவனமொன்றின் விலாசத்தை கொண்டதுமான (தனியாகவோ கூட்டாகவோ ) ஒரு பரசுரிப்பானது விளைவளவு சுட்டியினை ( cumalative index c1 ) கணிப்பீடு செய்தல் தொடர்பில் கருத்தில் கொள்ளப்படும். பிரசுரிப்பின் விலாசமானது இலங்கை நிறுவனமொன்றின் விலாசமாக மட்டும் இருப்பின் அத்தகையவை 2.0 சுட்டியினையும் அது போன்று விலாசமானது வெளிநாட்டு நிறுவனமொன்றின் விலாசமொன்றினை கொண்டிருப்பின் அத்தகையவை 1.5 சுட்டியினையும் பெற்றுக் கொள்ளும்.

தரப்பட்ட ஒரு எழுத்தாளருக்குரிய தனிப்பட்ட சுட்டியினை பெற்றுக் கொள்வதற்கு. ஒவ்வொரு பிரசுரிப்புக்களுடனும் இணைக்கப்பட்ட எழுத்தாளர்களிடையே சுட்டியானது சமமாக பகிரப்படும். ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் (வருடத்திற்கு வருடம்) அத்தகை சுட்டிகளின் கூட்டுத் தொகையே தனிப்பட்ட திரள் சுட்டி ஆகும்.

குறிப்புதவி புத்தகத்தை தயாரித்தல் : ஒவ்வொரு வருடத்திற்கும் ஒரு குறிப்புதவி பத்தகம் தயாரிக்கப்பட்டது.

இந்தப்புத்தகத்தில் இறுவட்டில் தரப்பட்டது போன்று அவ்வருடத்திற்குரிய சகல பிரசுரிப்புக்களும் அத்துடன் அவற்றிக்குரிய கணிப்பீடுகளும் தரப்பட்டிருக்கும் : முக்கியத்துவம் அற்ற விடயங்கள் இனங்காணப்படல் வேண்டும்.

மன்ற உறுப்பினர்களால் தீர்ப்புகள் வழங்கப்படும் எழுத்தாளர்களின் பெயர்கள் அகரவரிசைப்படி வழங்கப்படல் வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு எழுத்தாளரினதும் பிரசரிப்புகளின் குறிப்பு இலக்கம் அப்பிரசுரிப்புகளுக்குரிய சுட்டிகளுடன் தரப்படல் வேண்டும். ஒவ்வொரு எழுத்தாளரினதும் மொத்தச் சுட்டி குறிப்பிடப்படல் வேண்டும்.

ஏதேனும் எழுத்தாளரது பிரசுரிப்புகள் பொருட்படுத்தலிற்கு உரியன அற்றவனவாக கருதப்படின் அப்பிரசுரிப்புகளின் குறிப்புதவி இலக்கத்தை அந்த எழுத்தாளருக்கு வழங்குதல் வேண்டும்.

அகர வரிசைப்படி சஞ்சிகைகளின் பட்டியல், ஆவணத்தின் வகை மற்றும் பிரசுரிப்பு குறிப்பு இலக்கம் என்பன தரப்படல் வேண்டும்..

# செயற்பாட்டில் உள்ள நிகழ்ச்சித்திட்டங்கள்

## நிறுவன மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டம்

- அறிமுகவுரை
- நிகழ்ச்சித்திட்டன்முன்னேற்றம்

# அறிமுகவுரை

விவசாய திணைக்களத்தின் மதிப்பீடானது கடந்த வருடம் பூரணப்படுத்தப்பட்டதுடன், அதனது மீளாய்வு அறிக்கையானது அவதானிப்புரைகள் மற்றும் பரிந்துரைப்புகளுடன் அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு வருடகாலப் பகுதியில் சமர்ப்பிக்கப்பட்டது.

விவசாய திணைக்களத்தின் மதிப்பீடானது, அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் செயலாளர், பேரா.லவித வீரதுங்கவினால் தேசிய விஞ்ஞான மன்றத்திற்கு ஏற்படுத்தப்பட்ட நேரடி பெறுபேறு ஆகும்.

அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் 2007 ஜுலை மாதம் 24 ஆம் திகதியிடப்பட்டு வழங்கப்பட்ட தேசிய விஞ்ஞான மன்றத்தின் பணிப்பாணையின் பிரிவு (iv ) இன்படி இத்தகைய மீளாய்வுகளையும் மதிப்பீடுகளையும் மேற்கொள்வதற்கு தேசிய விஞ்ஞான மன்றத்திற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.இதனையடுத்து தேசிய விஞ்ஞான மன்ற உறுப்பினர்கள் இந்த முக்கிய பணியினை முன்னெடுத்து செல்வதற்கு ஐந்து உசாவுனர்களை ஏகமனதாக நியமனம் செய்தனர் இச்செயற்குழுவானது கலாநிதி, பராக்கிரம வைத்தியநாத - பிஎச்டி(இலண்டன்) தலைவர்,கலாநிதி.நிமல் சன்தரரட்ன - பிஎச்டி (விஸ்கொன்சின்), பேராசிரியர். புத்தி மாரம்பே பிஎச்டி (ஹிரோஷிமா) , தேசிய விஞ்ஞான மன்றத்தின் மன்ற உறுப்பினரும் கூட்டிணைப்பாளருமாகிய திரு.லக்ஷ்மன் பெரேரா மற்றும் பேராசிரியர் ஜனேந்திரா டி கொஸ்தா (வாசிப்பு). ஆகியோரினால் உருவாக்கம் செய்யப்பட்டது.

விவசாய திணைக்களத்தின் ஆராய்ச்சி நிறுவனங்களின் ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கைகளின் தற்போதைய நிலை தொடர்பில் ஒரு முக்கிய பகுப்பாய்வினை இம் மீளாய்வு தந்தது. ஆராய்ச்சி நிறுவனங்களை மீள் அமைப்பாண்மை செய்தலும் மீள் ஒழுங்கமைப்பு செய்தலும் மற்றும் "எதிர்கால நோக்கிற்கான மஹிந்த சிந்தனை" யில் இனம் காணப்பட்ட அபிவிருத்தி இலக்குகளை வெற்றிகரமாக சந்திப்பதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளும் செயற்படுத்துகையின் பொருட்டு சரியான இனம் காணப்பட்டதுடன் அவை தொடர்பில் விரிவான விளக்கங்களும் தரப்பட்டன.

# வருடப்பகுதியில் முன்னேற்றம்

## 2011 ஆம் ஆண்டின் 1வது காலாண்டு

விவசாயத் திணைக்களத்தின் இறுதி மீளாய்வு அறிக்கையானது,மன்றத்துக்கு முன்வைக்கப்பட்டதுடன்,மீளாய்வுகுழுவின் கூட்டிணைப்பளரான பேராசியர். டபிள்யு.எ.கெ.எம்.கொஸ்டா மீளாய்வினை பற்றிய விரிவான விளக்கத்ததை தந்ததுடன் இவை தொடர்பிலான பரிந்துரைப்புகளாவன DOA யிற்கு முன்வைக்கப்பட்டது. நீண்ட கலந்துரையடலிற்கு பின்பு ஜனாதிபதி அவர்களின் செயலாளருக்கு அறிக்கையை முன்வைக்கப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

படவரைபுகள், வடிவமைத்தல்,என்பது உள்ளடங்கலாக அறிக்கை பூரணப்படுத்தப்பட்டதுடன் வருடகாலப்பகுதியில் அறிக்கையின் அச்சிடல் பணியும் தேசிய விஞ்ஞான மன்ற அலுவலகத்தினால் பூரணப்படுத்தப்பட்டதுடன். ஜனாதிபதி அவர்களின் செயலாளரினால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க அறிக்கையின் ஒரு பொழிப்புரையும் தயாரிக்கப்பட்டது .

## 2011 ஆம் ஆண்டின் 2 ஆம் காலாண்டு

விவசாய திணைக்களத்தின் மீளாய்வு அறிக்கையானது 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி, ஜனாதிபதி செயலகத்தில் வைத்து, ஜனாதிபதியின் செயலாளருக்கு கையளிக்கப்பட்டது. மீளாய்வு அறிக்கை தொடர்பில் செயலாளர் தன் அபிப்பிராயங்களை தெரிவித்ததுடன், இவ்வறிக்கை தொடர்பில் விவசாயத்திணைக்களத்தினதும் விவசாய அமைச்சினதும் நோக்குகளை பெற்றுக் கொள்ளுதல் பொருட்டும் மற்றும் பரிந்துரைகளை எவ்வாறு அழலாக்கம் செய்தல் என கலந்துரையாடும் பொருட்டும் விவசாய அமைச்சுடனும் விவசாய திணைக்களத்துடனும் முன்னெடுக்கும் பொருட்டு ஒரு கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தார். 2011 ஆம் ஆண்டு மேமாதம் 19 ஆம் திகதி, ஜனாதிபதி செயலகத்தில் வைத்து இக்கூட்டமானது ஜனாதிபதியின் செயலாளர் திரு.லலித்.வீரதுங்க என்பவருக்கும் மற்றும் விவசாய அமைச்சின் அமைச்சின் அமைச்சர் கௌரவ. மஹிந்த யாப்பா அபயவர்தன,அமைச்சின் செயலாளர் திரு.கெ.இ.கருணாதிலக மற்றும் விவசாய திணைக்களத்தின் அலுவலர்கள் என்போருக்கிடையே இடம் பெற்றது. அறிக்கையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பரிந்துரைப்புகளை அமுலாக்கம் செய்வதற்கு விவசாய திணைக்களம் ஒத்துக் கொண்டார் .

## 2011 ஆம் ஆண்டின் 3வது மற்றும் 4வது காலாண்டு.

மீளாய்வு தொடர்பில் வேறு எது வித நிறுவகங்களும் தேசிய விஞ்ஞான மன்றத்திற்கு குறிப்பீடு செய்யப்படவில்லை.

## ஊடகம் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

- அறிமுகவுறை
- வருடகாலப்பகுதியில் முன் னேற்றம்

# அறிமுகவுரை

இந்த நிகழ்ச்சித்தின் பிரதான செயற்பாடானது ஆராய்ச்சி பெறுகைகளின் பிரயோகங்களும் அவற்றின் மேம்படுத்துகைகளும் ஆகும். தேசிய ஆராய்ச்சி மன்றமானது, தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் மானியங்களுடன் தொடர்புடைய அமைச்சுகள்/நிறுவனங்கள் என்பன அம்மானியங்களிலிருந்து பெற்றுக் கொண்ட பிரயோக மற்றும் மேம்படுத்துகை ஆராய்ச்சி பெறுபேறுகளை நன்கு அவதானிக்கும். இவ்வாறு செய்வதன் மூலம் தேசம் அத்தகைய மானியங்களிளுந்து பெறக்கூடிய உச்ச அளவிலான நன்மைகளை பெற்றுக் கொள்ளும்.

ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனங்களின் மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டம் 2009 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதுடன் இந்த வருடமும் இந்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்பிலான செயற்பாடுகள் ஆற்றப்பட்டன அத்துடன், இவ்விடயம் தொடர்பிலான மீளாய்வு அறிக்கையானது ஜனாதிபதியின் செயலாலளருக்கு சமர்ப்பிக்கப்பட்டது.
கடந்த வருடத்தில் ஊடக மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பல நிகழ்ச்சித்திட்டங்கள் இடம் பெற்றன அது போன்று தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின் அனுசரணையின் கீழ் குறிப்பிட்டு சொல்லத்தக்க விதத்தில் இடம் பெற்ற தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி கண்காட்சியுடன் ஆராய்ச்சி கருத்திட்டங்கள் பற்றிய பொதுமக்களின் விழிப்புணர்ச்சியானது ஆரம்பித்தது.

இக்காலப்பகுதியில் தேசிய விஞ்ஞான மன்றத்தின் வழிகாட்டல்கள் மற்றும் கூட்டிணைவின் கீழ் ஆராய்ச்சி கருத்திட்டங்கள் மற்றும் மின்னணுவியல் ஊடக வெளியீடுகள் வெளியிடப்பட்டன. கடந்த ஆறு மாத காலப்பகுதியில் தொழில் நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின் விதாதா நிலையங்களுடன் இணைந்து, Leismania ( ஒட்டுண்ணியால் பரவும் ஒரு வித நோய்) மற்றும் ஏனைய நீர் பற்றியும் மற்றும் வடமத்திய மாகாணத்தில் பரவலாக உள்ள தொற்று நோய்களை கடத்தும் சிற்றுயிரின நோய்கள் என்பன தொடர்பிலும் சில விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

# வருடகாலப்பகுதியில் முன்னேற்றம்

## 2011,1-4 வது காலாண்டு.

### இளம் விஞ்ஞானிகள் ஆரம்ப நிகழ்ச்சித்திட்டம்

இளம் விஞ்ஞானிகளுக்கான ஆரம்ப நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கு பற்றுவதற்கு இளம் ஆராய்ச்சியாளர்கள் பட்டம் பயிலும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பட்டப் பயிலுனர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணர்களுக்கு ஆராய்ச்சியினை தமது ஒரு பகுதியாக முன்னெடுப்பதற்காக ஆராய்ச்சி நடவடிக்கைகளில் இலங்கையில் பங்கு கொள்ள ஊக்குவிப்பதன் மூலம் இலங்கையில் ஆராய்ச்சி சார்ந்த. கலாச்சாரத்தை வளர்த்தலே இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்காகும். இந்த நிகழ்ச்சித்திட்டமானது, இலங்கையில் அதிஉயர்ந்த ஸ்தானத்திலிருக்கும் இலங்கைவாழ் ஆராய்ச்சியாளர்களுடன் இளம் விஞ்ஞானிகள் ஒரு கூட்டிணைவான உறவினை கட்டியெழுப்புவதற்கு துணைமையாக இருப்பதுடன், தேசிய மற்றும் சர்வதேச தரத்திலான ஆராய்ச்சியாளர்களை கண்காணிக்கவும் செய்கிறது.

மற்றும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மாணவர்களிடையே உருவாக்கப்பட்ட வலையமைப்பானது, வேறுபட்ட பரப்பெல்லைகளில் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கும் மற்றும் இணை ஆராய்ச்சிஎன்பன விருத்தியடைவதற்கு பாதை வகுக்கும். தேசிய அபிவிருத்திக்கு வழிவகுக்கக் கூடியதும் அது போன்று இலங்கையில் விஞ்ஞான ரீதியான ஏற்படும் பிரச்சனைகளுக்கான தீர்வினை, வேறுபட்ட பரப்பெல்லைகளில் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதன் மூலம் அணுகுதல் என்ற அடிப்படையில் பட்டம்பயிலும் மாணவர்களிடையே ஆராய்ச்சிகளை சார்ந்ததொரு கலாச்சாரத்தை வளர்ப்பதற்குரிய ஒரு தொகுப்பு செயற்பாடுகளை இந்த நிகழ்ச்சித்திட்டம் உள்ளடக்கியுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது ஐந்து பிரதான கூறுகளை கொண்டுள்ளது. ஒவ்வொரு கூறும் மாணவர்களின் ஆராய்ச்சி திறன் மற்றும் செயற்திறனை வளர்ப்பதற்கு உதவும் விதத்தில் செயற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது.

முதலாவது கூறு - ஒவ்வொரு நாளினை கொண்ட இரு பயிற்சிப் பட்டறைகள் - ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை பற்றி அறிமுகமப்படுத்துவதற்கு

இரண்டாவது கூறு - அதிதிகளால் ஆற்றப்படும் விரிவுரைத் தொகுப்பு - நடப்பு ஆராய்ச்சித் தலைப்புகளை பற்றி

மூன்றாவது கூறு - கள பயிற்சி - இலங்கையின் கள ஆராய்ச்சி தொடர்பில் செயல்முறைசார் அனுபவத்தினை வழங்கல்,

நான்காவது கூறு - ஆய்வுகூட பயிற்சி - இலங்கையில் கிடைக்கப் பெறக் கூடியதாக விருக்கும் நவீன ஆய்வு கூட அனுபவங்களை வழங்கல்

ஐந்தாவது கூறு - சகல ஆராய்ச்சி பிரேரணைகளையும் எழுதுதல்.

மொத்தமாக 66 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றன.

### தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி கண்காட்சி.

2011 ஆம் ஆண்டில் பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதியிலிருந்து 10 ஆம் திகதி வரை புத்தனயில் இடம் பெற்ற தேசித்திற்கு மகுடம் கண்காட்சியில் தேசிய விஞ்ஞான மன்றத்தின் மானியம் 06 - 73 இனை பெற்றுக் கொண்ட பேராசிரியர் ரக்கித் திசாநாயக்க, தேசிய விஞ்ஞான மன்றத்தின் மானியம் 09 - 05 இனைப் பெற்றுக் கொண்ட பேராசிரியர், ஆர்.பி.வி.கெ இராகபக்வு மற்றும் தேசியவிஞ்ஞான மன்றத்தின் மானிய 05 - 10 இனைப்பெற்றுக் கொண்ட கலாநிதி ஆர்.சமரசேகர ஆகிய,மூவரும் தமது ஆராய்ச்சி செயற்பாடுகளை காட்சிப்படுத்துனர். பல மானியம் பெறுனர்கள் தமது ஆராய்ச்சி தேடல்களை பதாகைகளில் விளக்கப்படுத்தினர். கண்காட்சிக்கு விஜயம் செய்து மக்களிடமிருந்து கண்காட்சி பற்றிய சிறந்த பாராட்டுதல்களை தேசிய விஞ்ஞான மன்றம் பெற்றுக் பெற்றுக் கொண்டதுகண்காட்சியின் சாவடிக்கு பல விஞ்ஞானிகள் தமது மாணவர்களுடனேயே வந்திருந்தனர். இந்நிகழ்ச்சித் திட்டத்தை நடத்துவதற்கு 20 மாணவர்கள் தமது ஒத்துழைப்பை வழங்கினர்.

# வருடகாலப்பகுதியில் முன்னேற்றம்

**தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி கண்காட்சி, புத்தள, ஸ்ரீலங்கா**










**மீள் விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டம்- :**




வலைக்கடப்பீட விருத்தி தொடரப்பட்டது.

**Neonatal Screening For congenital Hypothyroidism (பிறந்து 30 நாட்களுக்குள் சிசுவிற்கு கண்டக்கழலை நோயுள்ளதா என நுண்ணாய்வு செய்தல்) இனை மொனராசகல மாவட்டத்தில் அமுல் படுத்துகை செய்தல்**

பிறந்து 30 நாட்களுக்குள் சிசுவிற்கு கண்டக்கழலை நோயுள்ளதா என்ற நுண்ணாய்வினை மொனராகலை மாவட்டத்தில் அமுல்படுத்துகை செய்தல் தொடர்பிலான் முதல் கட்ட பேச்சு வார்த்தைகளா வன . மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் 2011 பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதி மு.ப.10.30 மணிக்கு இடம் பெற்றது. நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமாக இடம் பெற்றது.

கண்டக்கழலை எனும் நிலையானது அதன் ஆரம்பக் கட்டத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டால் குணமாக்க முடியும். இல்லாவிடில் பிற்காலத்தில் இந்நோயால் பாதிக்கப்பட்டவரின் மூளைவளர்ச்சி சாதாரண நிலையினை விட தாமதமாகவே வளரும். எனினும் சிறு பிராயத்திலேயே இந்நோய் பீடிக்கப்பட்டுள்ளதை அறிந்து குணப்படுத்தலானது சாத்தியக் கூறாக இருந்த போதிலும் அது மிகவும் விலைகூடிய ஒரு செயன்முறைாகும்.ருஹுுணு பல்கலைக்கழத்தின் மருத்துவ பீடத்தின் கரு மருத்துவ அலகானது இவ்விடயம் தொடர்பில் ஒரு முன்னோடி ஆய்வினை மேற் கொண்டதுடன் அந்த ஆய்வினை பின் தொடர்ந்து பல துறைமை ஆய்வுகளையும் மேற்கொண்டது தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் ஆராய்ச்சி மானியத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்த குறிப்பிட்ட நோயானது, பிறந்த 30 நாட்களுக்குள் சிசுவிற்கு கண்டக்கழலை உள்ளதா என கண்டுபிடிக்கக் கூடி வசதியினையும் மொனராகல மாவட்டத்திற்கு வழங்குகிறது.சுகாதார திணைக்களத்தின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அவரது 2010/08/13 ஆம் திகதியிடப்பட்டதும் மற்றும் 02-90/2010 எனும் இலக்கத்தை கொண்டதுமான சுற்றரிக்கையின் ஊடாக இரத்தப் புள்ளியின் தூய்மை தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் (Blood Spot Assay Technique ) மூலம் பிறந்த 30 நாள் சிசுவின் கண்டக்கழலை நுண்ணாய்வினை ஆராய்தலினை தொடங்கும் படி தென் மாகாணத்தை சார்ந்த சார்ந்த சகல அரச சுகாதார நிறுவனங்களுக்கும் அறியப்படுத்தினார். இந்த மைல்கல் நிகழ்வின் ஆரம்பவிழாவானது,2010 செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி கராபிட்டி மருத்துவ பீட கேட்போர் கூடத்தில் சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிரிசேன முன்னிலையில் இடம் பெற்றது.

சேவை அடிப்படையிலான இந்த நிகழ்வானது தென் மாகாணத்தில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டமையினால் இந்த நிகழ்ச்சியினை நாட்டின் ஏனை பாகங்களிலும் முன்னெடுக்கும்படி தேசிய ஆராய்ச்சி மன்றம் கரு மருத்துவ அலகினை கோரியது.ஆதலினால் 2011 பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதி மு.ப.10.30 மணிக்கு மொனராகல மாவட்ட பொது வைத்தியசாலையில் இவ்விடயம் தொடர்பிலான ஆரம்ப கட்ட கலந்துரையாடல் இடம் பெற்றது.

பிரதி நிதித்துவப்படுத்தும் குழு வறுமாறு அமையும் :

பிரேரிக்கப்பட்ட சேவினை மொனராகலை மாவட்ட வைத்திசாலைில் அமுல்படுத்தகை தொடர்பிலான கருத்திட்டத்தின் முதன்மை நுண்ணாய்வாளராக ருஹுுணு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் கரு மருத்துவ அலகின் சிரேட்ட விரிவுரைாளர் கலாநிதி. மஞ்சுளா ஹெட்டி ஆராய்ச்சி செயற்படுகிறார்.

இந்த நிகழ்ச்சித்திட்டதின் முக்கியத்துவமானது ருஹுுணு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் குழந்தை நல மருத்துவத்திணைக்களத்தின் பேரா.சன்ஜீவ அமரசேனாவினால் மேற்கொள்ளப்படுகிறது.

இலங்கை சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதார பணிகத்தின் சனசமூக உடற்கூறு விலாளரான மருத்துவர். சஞ்சீவ கொடகந்தகே தென் மாகாணத்தில் இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்துகை செய்யும் போது கற்ற பாடங்களை பகிர்ந்துக் கொள்வார்.

திருமதி மனிஷா.சி.இராஜபக்ஷ/தேசிய ஆராய்ச்சி மன்றம்

இந்த நிகழ்விற்கு ருஹுுணு பல்கலைக்கழகத்தி மருத்துவ பீடத்தை சேர்ந்த கலாநிதி மஞ்சுளா ஹெட்டியாராய்ச்சி, மொனரகலை பிரதேச வைத்திசாலை குழந்தை நல விசேட மருத்துவர் சமந்தி வெலகொட மற்றும் தேசிய ஆராய்ச்சி மன்ற கணக்காளர் திரு.என்.எஸ் ஹேவாகம்,தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் உதவிக்கணக்காளர் திரு .எஸ.கெ.கம்ஹேவா ஆகியோர் பங்கு பற்றினர்.

**2012 ஆம் ஆண்டிற்கான தேசத்திற்கு மகுடம் கண்காட்சியின் அபிலிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்**

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ்,கீழே குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களாவன அனுராதபுர மாவட்டத்தில் இடம் பெற்றன. தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின் விதாதா வினைச்சேர்ந்த விஞ்ஞான தொழில்நுட்ப அலுவலர்களுடன் இணைந்து தேசிய ஆராய்ச்சி மன்றம் இந்நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்தது.

1. வடமத்திய மாகணத்தில் நோய் காவிகளாலும் நீரினாலும் ஏற்படக்கூடிய தொற்று நோய்களை பற்றி மருத்துவர்கள் மற்றும் ஏனைய சுகாரதார அலுவலர்களுடன் கலந்துரையாடலும் விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களும்.

இந்த நிகழ்ச்சித் திட்டமானது 2011 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 22 ஆம் திகதி கண்டி, தேசிய வைத்தியசாலில் இடம் பெற்றுது. இந்த நிகழ்வில், தேசிய ஆராய்ச்சி மன்றத்தலைவர் பேராசியர் இ.எச். கருணாநாக்க, அநுராதபுர போதனா வைத்தியசாலை பணிபப்பாளர் கலாநிதி டபிள்யு.எம்.டி.பி. விஜயகோன் ,வடமத்திய மாகாணத்தின் நோய் பரவல் தடுப்பாளர் கலாநிதி .அசோகா முனசிங்க, பேராதெனிய பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் மருத்துவ திணைக்களத் தலைவரும் மருத்துவ பேராசிரிருமான பேரா.எஸ்.எ. எம் குலரட்ன , களனி பல்கலைக்கழத்தின் மருத்துவ பீடத்தின் தலைவரும் மருத்துவ பேராசிரியருமான பேரா. ரன்ஜன் பிரேமரட்ன, பேராதெனிய பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் புகழ்வாய்ந்த நுண்உயிரியல் பேராசிரியரான என் சி அரச குலரட்ன, பேராதெனிய பல்கலைக்கழகத்தின் விலங்கு விஞ்ஞான பீடத்தின் ஒட்டுண்ணியியல் பேராசிரியரான பேராசிரிர், ஆர்,பி.வி.கெ. இராஜபக்ச ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

இந்த நிகழ்ச்சி திட்டமானது நோய்காவி மற்றும் நீரினால் ஏற்படக் கூடிய தொற்று நோய்களை பற்றி விழிப்புணர்ச்சியை மாகாணத்தின் சுகாதார அதிகாரிகளிடையே ஏற்டுத்தவும் அந்த அறிவினை வலுப்படுத்தவும் நடாத்தப்பட்டது.

2. வட மத்திய மாகாணத்தை சேர்ந்த விவசாய மற்றும் கள அலுவலர்கள் மற்றும் ஏனைய பழமைவாய்ந்த சமூக அமைப்பாண்மைகளினைச் சேர்ந்த ஆளணியினர் ஆகியோருக்கு நோய் காவிகளாலும் நீரினாலும் ஏற்படக் கூடிய தொற்று நோய்களை பற்றி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தப்பட்டதுடன் கலந்துரையாடல்களும் பயிற்சிப் பட்டறைகளும் இடம் பெற்றன.

தேசிய ஆராய்ச்சி மன்றத்தலைவர் பேராசியர் இ.எச். கருணாநாக்க, அநுராதபுர போதனா வைத்தியசாலை பணிபப்பாளர் கலாநிதி தபிள்யு.எம்.டி.பி. விஜயகோன் ,வடமத்திய மாகாணத்தின் நோய் பரவல் தடுப்பாளர் கலாநிதி .அசோகர முனசிங்க, பேராதெனிய பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் மருத்துவ திணைக்களத் தலைவரும் மருத்துவ பேராசிரிருமான பேரா.எஸ்.எ. எம் குலரட்ன , களனி பல்கலைக்கழத்தின் மருத்துவ பீடத்தின் தலைவரும் மருத்துவ பேராசிரியருமான பேரா. ரன்ஜன் பிரேமரட்ன, பேராதெனிய பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் புகழ்வாய்ந்த நுண்உிரியல் பேராசிரியரான பேராதெனிய பல்கலைக்கழகத்தின் விலங்கு விஞ்ஞான பீடத்தின் ஒட்டுண்ணியியல் பேராசிரியரான பேராசிரிர், ஆர்,பி.வி.கெ. இராஜபக்ச ஆகியோர் கலந்துக் கொண்டார்.




3. "determination of sero-prevalance in a community with active transmission of cutaneous leishmaniasis in Sri Lanka" எனும் தலைப்பில் சமூக விழிப்புணச்சி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் முன்னோடி நோய் பரவல் தடுப்பு அளவளாய்வு.

201. நவம்பர் 18 மற்றும் 19 ஆம் திகதிகளில் இரு நாள் நிகழ்ச்சித் திட்டம் தலவாயில இடம் பெற்றது. நிகழ்ச்சித்திட்டமானது ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒண்டுண்ணியியல் திணைக்களத்தின் தே,ஆ.மன்ற மானிம் 09-24 இல் மருத்துவர் சலிந்ரா ரணசிங்க மற்றும் பேரா.கிரிக் மடல்சேவஸ்கி (உலக சுகாதார அமைப்பு - Leishmaniasis நிகழ்ச்சித்திட்டதலைவர்) தலவாயிலுள்ள எம்.ஒ.எச் அலுவலகத்தை சேர்ந்த மருத்துவ அலுவலர்கள் மற்றும் மாகாண அகாதார பணிப்பாளர் அலுவலகத்தை சார்ந்த அலுவர்கள் ஆகியோரின் கூட்டினைவுடன் இடம் பெற்றுது.இந் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளார் என சந்தேகிக்கப்பட்ட பல பேர் மேலதிக ஆய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.






Lismaniasis நோயின் பிறபொருள் எதிரி பற்றி மேற்கொள்ளப்பட்ட Rot பரி சோதனை - மருத்துவ பிரிவு தலவா அனுராதபுர வைத்தியசாலை.



உச்ச அளவில் நோயாய் பீடிக்கப்பட்ட ஒருவரினை பரிசோதித்தல்; வவுனியா மாவட்டத்தை சேர்ந்தவரும் மற்றும் VL நோயாளியாக உறுதிபடுத்தப்பட்டவரின் RDT பெறுபேறுகள் படமானது - உச்ச அளவில் நோயால் பாதிக்கப்பட்ட ஒருவரின் சீரத்தில் Leismania விற்கு எதிரான பிற பொருள் எதிரி RDT - விரைவாக நோயினை கண்டுபிடிக்கும் பரிசோதனை.








Leismanisasis செயற் திட்டம் - தலவா பிரிவு, அனுராதபுர மாவட்டம்.

இந்த நிகழ்வில் ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைகழத்தின் ஒண்ணியியல் பேராசிரியரான ரேனுவிக்கரமசிங்க, ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழத்தைச் சேர்ந்த மருத்துவர் சாலிந்ரா ரனசிங்க, வட மத்தி மாகாண நோய் பரவல் மற்றும் தடுப்பாளரான . மருத்துவர் அசோக்கா முனசிங்க அனுராதபுரயில் உள்ள போதனா வைத்தியசாலை சேர்ந்த மருத்துவர். சஞ்சீவ ஹுலங்கழவ அநுராதபுர போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த மருத்துவர்.ஜி.கெ.என். ஒதெல்லா தலவாயிலுள்ள எம்.ஒ.எச் அலுவலகத்தை சேர்ந்த மருத்துவர்.எஸ்.ஆர்.ஆர். பண்டார, தலவாயிலுள்ள எம்.ஒ.எச். அலுவலகத்தை சேர்ந்த மருத்துவர்.வி.டி.கெ. செனவிரட்ன, எம்.ஒ.எச்.அலுவலர்களும் மற்றும் துறை பதவியணியினரும், ஸ்ரீஜயவர்தன பல்கலைக்கழகத்தை சேர்ந்த கனிஸ்ட விரிவுரையாளர்களும் செய்கை முறை விளக்கமளிப்பாளர்களும், மாகாண சுவ சஹன் செவயினைச் சேர்ந்த அலுவலர்கள் 17 பேர்,தேசிய ஆராய்ச்சி மன்றத்தினைச் சேர்ந்த அலுவலர்கள் மற்றும் அப்பிரதேசத்து மக்கள் ஆகியோர் பங்கு பற்றினர்.

# ஊடக மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

இலங்கையின் புத்தள எனுமிடத்தில்2011, பெப்ரவரி மாதம் இடம் பெற்ற தேசத்திற்கு மகுடம்
அபிவிருத்தி கண்காட்சியில் முன்னளிப்பு செய்யப்பட்ட சில பதாகைகள்







# நிதிக் கூற்றுகள் 2011.

## தேசிய ஆராய்ச்சி மன்றம் - இலங்கை

## 2011 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திக்கான நிதிச் செயலாற்றுகை கூற்று.

| | குறிப்புகள் | 2011<br>ரூபா | 2010<br>ரூபா |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| நடப்பு பெறுகைகள் - தே.வி.ம.நிர்வாகம் | 4-ஆ | 6,314,000.00 | 5,409,042.40 |
| நடப்பு பெறுகைகள் - ஆராய்ச்சி அபிவிருத்தி | 4-அ | 19,476,733.81 | 9,877,087.88 |
| ஏனைய பெறுகைகள் | | 33,810.00 | 40,000.00 |
| **மொத்த வருமானம்** | | **25,824,543.81** | **15,326,130.28** |
| **செலவினங்கள்** | | | |
| தனி ஆள் வேதனாதிகள் | | 1,737,859.80 | 1,588,492.90 |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 4-அ | 19,476,733.81 | 9,877,087.88 |
| விநியோகமும் நுகர்வும் | | 2,250,603.59 | 1,581,733.67 |
| பெ.தேய்வு மற்றும் கடன் தீர்வு செலவினங்கள் - தே.ஆ.ம. | | 15,057,436.03 | 13,597,163.87 |
| பெ.தேய்வு - தே.ஆ.ம. அலுவலக கருவிகள் | | 343,425.17 | 880,188.64 |
| ஏனைய செலவினங்கள் | | 5,093,893.05 | 2,589,793.17 |
| நிதிக்கிரயங்கள் | | 13,394.25 | 114,329.46 |
| **மொத்த செலவினங்கள்** | | **43,973,345.70** | **30,228,789.59** |
| கூட்டிணைவுகளின் மிகைகளின் பங்கு | | - | - |
| **காலப்பகுதிக்குரிய மிகை/நட்டம்** | | **(18,148,801.89)** | **(14,902,659.31)** |
| பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டவாறு | | | |
| நிறுவனத்தை கட்டுப்படுத்தும் உரிமையாளர் | | (18,148,801.89) | (14,902,659.31) |
| சிறுபான்மைகளின் வட்டி | | - | - |
| | | **(18,148,801.89)** | **(14,902,659.31)** |

*பக்கம் **05** இலிருந்து பக்கம் **10**வரைக்குமுள்ள குறிப்புக்களாவன இந்நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைக்கப்பட்ட பகுதியாகும். அடைப்புக்குறிக்குள் இருக்கும் இலக்கங்கள், கழிக்கப்படல் வேண்டும். என்பதை காட்டுகிறது.*

## தேசிய ஆராய்ச்சி மன்றம் - இலங்கை

## 2011 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்று

| | குறிப்புகள் | 2011 ரூபா | 2010 ரூபா |
|---|---|---|---|
| **சொத்துகள்** | | | |
| **நடப்புச் சொத்துகள்** | | | |
| காசும் காசிற்கு சமமானவையும் | | 1,122,565.99 | 1,819,173.90 |
| பெறுகைகள் | | 150,896.00 | 241,742.00 |
| இருப்புகள் | | | |
| முற்பணக் கொடுப்பனவு | | | |
| தே.வி.ம மானியம் | | 268,113,399.97 | 114,996,533.07 |
| ஏனைய நடப்புச் சொத்துகள் | | | |
| | | **269,386,861.96** | **117,057,448.97** |
| **நடப்புச் சொத்துகள் அல்லாதவை** | | | |
| பொறுகைகள் | | | |
| கூட்டிணைகளில் முதலீடுகள் | | | |
| ஏனைய நிதிச் சொத்துகள் | 5 | 105,000.00 | 130,000.00 |
| சொத்து ஆதனம் மற்றும் கருவிகள் | 6 | 119,496,763.03 | 109,726,350.68 |
| நிலம் மற்றும் கட்டிடம் | | | |
| தொட்டுணர முடியாத சொத்துகள் | | | |
| ஏனைய நிதியல்லாத சொத்துகள் | | | |
| | | **119,601,763.03** | **109,856,350.68** |
| **மொத்த சொத்துகள்** | | **388,988,624.99** | **226,913,799.65** |
| **பொறுப்புகள்** | | | |
| **நடப்புப் பொறுப்புகள்** | | | |
| செலுத்தப்பட வேண்டியவைகள் | 7 | 47,545.38 | 55,807.23 |
| | | **47,545.38** | **55,807.23** |
| **நடப்பல்லாத பொறுப்புகள்** | | | |
| செலுத்தப்பட வேண்டியவைகள் | | | |
| | | - | - |
| **மொத்த பொறுப்புகள்** | | **47,545.38** | **55,807.23** |
| **தேறிய சொத்துகள்** | | **388,941,079.61** | **226,857,992.42** |
| **தேறிய சொத்துகள்/உரிமையாண்மை** | | | |
| மூலதனம் பங்களிப்பு செய்யப்பட்டமை | | | |
| ஏனைய அரசு | | | |
| ஒதுக்கீடுகள் | | | |
| திரட்டப்பட்ட மிகைகள் (நட்டங்கள்) | 8 | 388,941,079.61 | 226,857,992.42 |
| சிறு பான்மைகளின் வட்டி | | | |
| **மொத்த தேறிய சொத்துகள்** | | **388,941,079.61** | **226,857,992.42** |

இந்நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் முன்னளிப்பிற்கும் பொறுப்பாக இருப்பது மன்றம் ஆகும்.
மன்றத்திற்காகவும் மற்றும் அதன் சார்பாகவும் கையொப்பமிடப்பட்டுள்ளது.

…………………………..

பேரா.இ.எச்.கருணாநாயக்க
தலைவர் தே.வி.ம.

**2011,**பெப்பரவரி **28**

## தேசிய ஆராய்ச்சி மன்றம் - இலங்கை
## 2011 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திக்கான காசுப்பாய்ச்சல் கூற்று

| | 2011<br>ரூபா | 2010<br>ரூபா |
|---|---|---|
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| **பொறுகைகள்** | | |
| வரி | | |
| திறைசேரியிலிருந்து பெறுகைகள் (நடப்பு+அபிவிருத்தி உதவிகள்) | 206,314,000.00 | 65,409,042.40 |
| பொருட்கள் மற்றும் சேவைகளின் விற்பனை | | |
| மட்டுப்படுத்தப்பட்ட மானியங்களிலிருந்து பெறுகைகள் | 13,099,174.56 | 6,323,809.21 |
| பெறப்பட்ட வட்டி. | | |
| ஏனைய பெறுகைகள் | 124,656.00 | 5,000.00 |
| **கொடுப்பனவுகள்** | | |
| ஊழியர்களுக்கான காசுக் கொடுப்பனவு | (1,737,859.80) | (1,598,968.43) |
| Superannuation | | |
| விநியோகங்கள் | | |
| ஆராய்ச்சி மானியங்கள் | (213,262,709.05) | (64,476,585.26) |
| செலுத்தப்பட்ட வட்டி | | |
| ஏனைய கொடுப்பனவுகள் | (4,452,050.85) | (4,110,664.49) |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல்** | **(85,210.86)** | **1,551,633.43** |
| | | |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| ஆதனம் மற்றும் கருவிகள் கொள்வனவு | (781,818.77) | |
| ஆதனம் மற்றும் கருவிகள் விற்பனை வருமானம் | | |
| முதலீடுகள் விற்பனைவருவாய் | | |
| வெளிநாட்டு நாணய பிணைகளை கொள்வனவு | | |
| **முதலீட்டு செயற்பாடுகளிருந்து காசுப்பாய்ச்சல் கூற்று.** | (781,818.77) | - |
| | | |
| **நிதி செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| இரவல்களிலிருந்து வருமானம் | | |
| இரவல்களிலிருந்து மீள் கொடுப்பனவு | | |
| அரசிற்கு பகிர்வு/மீள் கொடுப்பனவு. | | |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்து தேறியகாசுப்பாய்ச்சல்** | - | - |
| **காசும் காசிற்கு சமமானவற்றில் தேறிய அதிகரிப்பு (குறைவு)** | **(696,607.91)** | **1,551,633.43** |
| **வருட தொக்கத்தில் காசும் காசிற்கு சமமானவையும்** | **1,819,173.90** | **267,540.47** |
| **வருட இறுதியில் காசும் காசிற்கு சமமானவையும்** | **1,122,565.99** | **1,819,173.90** |

*பக்கம் **05** இலிருந்து பக்கம் **10** வரைக்குமுள்ள குறிப்புக்களாவன இந்நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைக்கப்பட்ட பகுதியாகும் அடைபப்புக்குறிக்குள் இருக்கும் இலக்கங்கள்,கழிக்கப்படல் வேண்டும் என்பதை காட்டுகிறது.*

## இலங்கை தேசிய ஆராய்ச்சி மன்றம்

## 2011 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திக்கான தேறிய சொத்து/ஒப்புரவியல் மாற்றங்களுக்கான கூற்று.

| | திரட்டப்பட்ட மிகை அல்லது நட்டம் | மொத்தம் | மொத்தம் தேறிய சொத்துகள்/ஒப் புரவு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| **2010 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | 226,857,992.42 | 226,857,992.42 | 226,857,992.42 |
| ஆரம்பமிகுதிக்கு சீராக்கம் | (100,431.11) | (100,431.11) | (100,431.11) |
| கணக்கியல் கொள்கையில் மாற்றங்கள் | | | |
| | 226,757,561.31 | 226,757,561.31 | 226,757,561.31 |
| **2011 ஆம் ஆண்டில் தேறிய சொத்து/ஒப்புரவில் மாற்றங்கள்** | | | |
| சொத்துக்கள் மீள் பெறுமானம் செய்யப்பட்டதில் பெற்றுக் கொண்டவை | | | |
| | (190,946.00) | (190,946.00) | (190,946.00) |
| முதலீடுகள் மீள் பெறுமானம் செய்யப்பட்டதில் நட்டம் | | | |
| மொழிபெயர்ப்பு தொடர்பிலான வேறுபாடுகளை பரிமாறல் | | | |
| வெளிநாடுகளுடனான செயற்பாடுகள் | | | |
| தேறிய சொத்து/ ஒப்புரவில் நேரடியாக இனம்காணப்பட்ட தேறிய வருமானம் | 180,523,266.19 | 180,523,266.19 | 180,523,266.19 |
| காலப்பகுதிக்குரிய மிகை/நட்டம் | (18,148,801.89) | (18,148,801.89) | (18,148,801.89) |
| **காலப்பகுதியில் இனம்காணப்பட்ட மொத்த வருமான மற்றும் செலவினங்கள்** | | | |
| **2011 டிசம்பர் 31 இல் முன்கொண்டு செல்லப்பட்ட மிகுதி.** | **388,941,079.61** | **388,941,079.61** | **388,941,079.61** |

*பக்கம் **05** இலிருந்து பக்கம் **10**வரைக்குமுள்ள குறிப்புக்களாவன இந்நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைக்கப்பட்ட பகுதியாகும். அடைப்புக்குறிக்குள் இருக்கும் இலக்கங்கள், கழிக்கப்படல் வேண்டும். என்பதை காட்டுகிறது.*

## இலங்கை தேசிய விஞ்ஞான மன்றம்
## 2011 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்.

**கணக்கியல் கொள்கைகள்**

**1. அறிக்கை செய்யும் நிறுவனம்**

தேசிய ஆராய்ச்சி மன்றமானது **,1514/28** ஆம்

இலக்க அதிவிசேட வர்த்தமானியினால், யாப்பின் **33** வது உறுப்புரையின் கீழ் ஜனாதிபதியின் அதிகார பூர்வமான ஆணையின் மூலம்
ஒரு விசேட முகவர்நிலையமாக தாபிக்கப்பட்டது.

தேசிய ஆராய்ச்சி மன்றமானது இலக்க **380/72,** பௌத்த லோக மாவத்தை, கொழும்பு **07** எனுமிடத்தில் அமைந்துள்ளது. டிசம்பர் **31** இல் முடிவடையும் வழமையான நிதிவருடத்தை உள்ளடக்கிய வகையில் நிதிக்கூற்றுக்களாவன தயாரிக்கப் பட்டுள்ளன.

**2. தயாரிப்பின் அடிப்படை**

**2.1 ஒப்புமைக் கூற்று**

பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள் மற்றும் செயன்முறைகளுக்கு அமைவுற நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**2.2 அளவீடுகளின் அடிப்படை**

ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் செயன்முறைகளுக்கு அமைவுற வரலாற்றுக் கிரய அடிப்படையில் நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதுடன் இக்கணக்குகளை பாதிக்கக் கூடிய பணவீக்க காரணிகளில் எதுவித சீராக்கங்களும் மேற்கொள்ள வில்லை.

**2.3 பயன்பாட்டில் உள்ளதும் மற்றும் நாணய முன்னனிப்பும்**

தேசிய விஞ்ஞான மன்றத்தின் பயன்பாட்டில் உள்ள நாணயமான, இலங்கை ரூபாயிலேயே நிதிக் கூற்றுகள் முன்னளிப்பு செய்யப்பட்டுள்ளது. இலங்கை ரூபாயில் முன்னளிப்பு செய்யப்பட்டுள்ள சகல நிதி ரீதியிலான தகவல்கள் வேறு தெரியப்படுத்தினால் அன்றி அண்மித்த சகத்தில் முன்னளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**2.4 மதிப்பீடுகளின் பயன்பாடும் தீர்ப்புகளும்.**

இலங்கையின் கணக்கியல் கொள்களுக்கேற்ப முன்னளிக்கப்பட்ட நிதிக் கூற்றுகள் தொடர்பில் மதிப்பீடுகளை மேற்கொள்ளல் முகாமைத்துத்தின் பணியாக அமைகிறது. இது கணக்கியல் கொள்கைகளின் பிரயோகங்கள் மற்றும் சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவினம் என்பனவற்றின் அறிக்கை செய்யப்படும் தொகையில் பாதிப்பினை ஏற்படுத்துகிறது. தீர்ப்புகளும் மற்றும் மதிப்பீடுகளும் வரலாற்று ரீதியிலான அநுபவத்தையும் மற்றும் சூழ்நிலைக்கு அமைவுற நியாயமானது என நம்பப்படுகின்ற எதிர்பார்ப்புகள் உள்ளடங்கலாக ஏனைய காரணிகளையும் அடிப்படையாக கொண்டது. எவ்வாறாயினும் இந்தத் தீர்ப்புகள் மற்றும் அனுபவங்களிலிருந்து உண்மையான அனுவம் மற்றும் பெறுபேறுகள் வேறுபடலாம். மதிப்பீடுகளும் மற்றும் அதற்கு ஆதாரமான ஊகங்களும் ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது. மதிப்பீகள் மீளாய்வு செய்யப்பட்ட அதே காலப்பகுதியிலேயே கணக்கியல் மதிப்பீடுகளுக்கான மீளாய்வும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த மீளாய்வானது அந்தக் குறிப்பிட்ட கலாப்பகுதியினையும் மற்றும் எதேனும் எதிர் காலப்பகுதியினையும் பாதிக்கலாம்.

3**f3. முக்கியமான கணக்கியல் கொள்கைகள்**

முன்னைய வருடத்தினை போன்று அதே கணக்கியல் கொள்கைகள் மாறாது பின்பற்றப்பட்டிருக்கின்றது. நடப்பு நிலையினை முன்னளிப்பு செய்தல் பொருட்டு குறிப்பிட்ட சில ஒப்புமை ரீதியிலான தகவல்களாவன அவசியமான சந்தர்பங்களில் மீள் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**3.1 வெளிநாட்டு நாணயம்**

சகல வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்களும் செயற்பாட்டில் பயன்படுத்தப்படும் நாணங்களாக அக்கொடுக்கல் வாங்கள் இடம் பெற்ற காலப்பகுதியில் நிலவிய நாணய பரிமாற்று வீதத்தில் மாற்றீடு செய்யப்பட்டுள்ளது.

**3.2 சொத்துக்களும் அவற்றின் மதிப்பீட்டு அடிப்படையும்.**

ஐந்தொகையில் நடப்புச் சொத்துக்களாக காட்டப்படுபவன வற்றிக்குள் காசு,மற்றும் வங்கி மீதிகள் என்பனவற்றுடன் வழமையான சயற்பாட்டு காலப்பகுதிக்குள் அல்லது அறிக்கை செய்யப்படும் திகதியிலிருந்து ஒருவருட காலத்திற்குள் என்ற இரண்டுக்குள் எந்தக் காலப்பகுதி குறைவாக இருக்கின்றதோ அந்த காலப்பகுதிக்குள் காசாக மற்றக்கூடியவை என்பன ஆகும்.

### 3.2.1 சொத்து ஆதனம் மற்றும் கருவிகள்

#### 3.2.1.1 அங்கீகாரமும் அளவீடும்

சொத்து ஆதனம் மற்றும் கருவிகளாவன திரட்டப்பட்ட பெறுமானத் தேய்வினை விட குறைவான கிரயத்தில் மதிப்பீடு செய்யப்படுகிறது. ஆதனம் மற்றும் கருவிகள் என்பவற்றின் கிரயச் செலவின்த்திற்குள் கொள்வனவு செலவினம், நிலையான சொத்தின் கொள்வனவு அல்லது அதன் நிர்மாணத்தினை நேரடியாக பாதிக்ககூடிய ஏதேனும் எதிர்பாராத விதமான செலவினம், ஏதேனும் ஒரு சொத்தினால் அச் சொத்தினால் பெறக்கூடிய பயன்படு நிலைக்கு அச்சொத்தினை தொழிற்படச் செய்வதற்கு ஏற்படககூடிய செலவினம், அச்சொத்தினை பகுதிகளாக பிரித்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பில் ஏற்படக் கூடிய செலவினம் மற்றும் குறிப்பட்ட இடத்திற்கு அச் சொத்தினை மீள் இட அமைவு செய்தல் தொடர்பில் ஏற்படும் செலவினம் என்பன உள்ளடங்கும். அச்சொத்தினை தொழிற் படச் செய்தல் தொடர்பில் கொள்வனவு செய்யப்படும் மென்பொருள் பொதியின் கிரயச் செலவினமும் அச் சொத்தின் மூலதனச் செலவுடன் சேர்க்கப்படும் - சொத்து ஆதனம் கருவியின் உதிரிப்பாகங்களாவன வேறுபட்ட பாவனைக் காலத்தை கொண்டிருப்பின் அவை சொத்து ஆதனம் கருவியின் தனிப்பட்ட பாகங்களாக கணக்கீடு செய்யப்படும். தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் மானியங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட சொத்து ஆதனம் உபகரணம் என்பன அவை மாற்றீடு அல்லது விற்கப்படும் வரையில் தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் சொத்து ஆதனம் உபகணத்தின் ஒரு பகுதியாகஇனங்காணப்படும்

#### 3.2.1.2. அதுத்து வரும் கிரயச் செலவினங்கள்

சொத்து,ஆதனம் உபகரணம் ஒன்றிக்கு ஏதேனும் ஒரு பாகத்தை பதிதாக பொருத்தம் செய்யப்படின் அது அந்த சொத்து ஆதனம் உபகரணத்தின் மீதியுடன் முற்கொண்டு செல்லப்பட வேண்டும்மென இனங்காணப்படும். அவ்வாறு பொருத்தப்படும் பாகத்தின் மூலம் எதிர்கால பொருளியல் நன்மைகள் இருப்பதாக கருதப்படின் அத்தகைய நேரத்தில் சொத்தின் கொள்விலையானது கணிப்பீடு செய்யப்படும். அதே போன்று அத்தகைய பாகம் பொருத்தப்பட்ட பின்பு அந்த சொத்தினை பயன்படுத்து வதாலே அல்லது விற்பதாலோ எதிர்கால நன்மை எதுவும் இல்லாதுவிடின் சொத்தின் முற்கொண்டு செல்லப்பட்ட மீதியானது மீண்டும் குறைத்து மீள் கணிப்பீடு செய்யப்படும் இத்தகைய செயற்பாடுகளில் சொத்துக்களினை மீள் கணிப்பீடு செய்யும் ஏற்படும் அதிகரிக்கப்பட்ட பெறுமதியோ அல்லது குறைந்த பெறுமதியோ வருமானம் அல்லது நட்டமாக இனங்காணப்பட்ட போதிலும் சொத்தின் பெறுமதியின் மீள் கணிப்பீட்டில் பெறுமதி அதிகரிப்பின் அது இலாபமாக கருதப்பட்டு வகைப்படுத்தப்படாது.

சொத்தினை பராமரிப்பதில் ஏற்படக்கூடிய நாளாந்த செலவினமானது மன்றத்தின் செலவினங்களாக இனங்காணப்படும்.

#### 3.2.1.3 பொறுமானத் தேய்வு

நிலையான சொத்தின் கிரய விலையில் அச்சொத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட பாவனைக்காலத்திற்குள் பதிவழிப்பு செய்யும் படியாக கணிப்பீடு செய்யப்படும் பெறுமானத் தேய்வானது இலாப நட்டக்கணக்கில் பதியப்படும். சொத்து கொள்வனவு செய்யப்படும் வருடத்தில் பெறுமானத்தேய்வு மேற்கொள்ளப்பட மாட்டாது எனினும் சொத்தினை விற்பனை செய்யும் வருடத்தில் முழுவருடபெறுமானத் தேய்வு மேற்கொள்ளப்படும்.

மதிப்பீடு செய்யப்பட்ட பாவனைக்காலமும் மற்றும் நடப்பு மற்றும் ஒப்புமை செய்யப்பட்ட வருடங்களிற்கான நூற்றுவீதமும் வறுமாறு:

| | | |
|---|---|---|
| சில்லறைச் சொத்துகள் | 2 வருடங்கள் | 50.00% |
| சமையலறைகருவிகள், தட்டுகள்,கிண்ணங்கள் | 3 வருடங்கள் | 33.33% |
| அறை விரிப்புகள் | 3 வருடங்கள் | 33.33% |
| பாதுகாப்பு உபகரணம் | 3 வருடங்கள் | 33.33% |
| நூலக புத்தகங்கள் | 3 வருடங்கள் | 33.33% |
| கணணி அச்சிடல்இயந்திரம், துணையுறுப்புகள; | 5 வருடங்கள் | 20% |
| கணிப்பொறிகளும் மணிக்கூடுகளும் | 5 வருடங்கள் | 20 % |
| மின்விநியோக உபகரணம் | 5 வருடங்கள் | 20 % |
| செப்பினாலான உருப்படிகள் | 5 வருடங்கள் | 20 % |
| மோட்டார் வாகனம் | 5 வருடங்கள் | 20 % |
| குளிர் காற்றூட்டி | 10 வருடங்கள் | 10 % |
| கட்டிடம் | 10 வருடங்கள் | 10 % |
| விரிவு படுத்தக் கூடிய சொத்துகள் | 10 வருடங்கள் | 10 % |
| இயந்திரமும் கருவிகள் | 10 வருடங்கள் | 10 % |
| அலுவலக கருவிகள் | 10 வருடங்கள் | 10 % |
| குளிர் பதனப் பெட்டி | 10 வருடங்கள் | 10 % |
| உள்ளக இணைப்புகள் | 0 | |

ஆராய்ச்சி மானியங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட சொத்து ஆதனம் உபகரணங்கள் என்பன அவை மாற்றீடு செய்யப்படும் வரையில் அல்லது விற்கப்படும் வரையில் கீழ்குறிப்பிடப்பட்ட பாவனைக் காலத்திற்கள் கீழ்குறிப்பீடு செய்யப்பட்ட நூற்று வீதத்தில் பெறுமானத் தேய்வு செய்யப்படும்.

ஆய்வு கூட கருவி (பிரிவு 1) 10 வருடங்கள் 10%

ஆய்வு கூட கருவி (பிரிவு 2) 10 வருடங்கள் 20%

பெறுமாத் தேய்வு முறைகள், பாவனைக்காலம் மற்றும் மிச்ச பெறுமானங்கள் என்பன அறிக்கை செய்யப்படும் திகதியில் மீள்மதிப்பீடு செய்யப்படும்.

### 3.2.2. புலனாகாதா சொத்து மற்றும் கடன் தீர்வும்

புலனாகாதா சொத்தொன்றிக்கு எதிர்கால பொருளியல் நன்மைகள் உண்டு என உறுதியாக மதிப்பீடு செய்யப்படின் அத்தகையவை தே.ஆ.மன்ற மானியத்திற்குள் உள்ளடக்கப்படும் என்பதுடன் அவற்றின் கிரயமானது காசாக மாற்றக்கூடிய பெறுமதியில் கணிப்பீடு செய்யப்படும்.இந்த சொத்துக்களாவன அதன் கிரயத்திலிருந்து திரட்டப்பட்ட கடன்தீர்வினை கழித்த பெறுமதியில் ஐந்தொகையில் காட்டப்படும். புலனாகாத சொத்து பாவனைக்கு கிடைக்கக் கூடியதாகவுள்ள நாளிலிருந்து அதன் மதிப்பீட்டு பாவனைக்காலத்தை கருத்தில் கொண்டு நேர் கோட்டு முறையில் கணிப்பீடு செய்யப்பட்ட கடன்தீர்வு தொகை இலாப நட்டக்கணக்கில் காட்டப்படும்.

### 3.2.3. இருப்புகள்

இருப்புக்களாவன வரலாற்று கிரய அடிப்படையில் கணிப்பீடு செய்யப்படும்.

### 3.2.4. வியாபாரம் மற்றும் ஏனைய பெறுகைகள்

வியாபாரம் மற்றும் ஏனைய பெறுகைகளாவன அவற்றின் மதிப்பீடு செய்யப்பட்ட காசாக மாற்றக் கூடிய பெறுமதியில் காட்டப்படும்.

### 3.2.5. தேசிய ஆராய்ச்சி மன்ற மானியம்

பல வருட காலமாக வழங்கப்பட்ட ஆராய்ச்சி மானியங்களின் திரட்டப்பட்ட பெறுமதியினை தேசிய ஆராய்ச்சி மனறத்தின் மானியம் பிரதிநிதித் துவப்படுத்துகின்றது. தேசிய ஆராய்ச்சி மன்ற மானியங்களிலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் அச் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்ட காலப் பகுதிக்குரிய வருமானக் கூற்றில் செலவினங்களாக காட்டப்படும் ,எனினும் சொத்து, ஆதனம் கருவிகள் என்பனவற்றினை கொள்வனவு செய்தல், நிர்மாணித்தல் என்பவை தொடர்பில் ஏற்படும் செலவினம் வருமானக் கூற்றில் பதியப்படாது என்பதுடன் அச் சொத்து ஆதனம் கருவிகள் என்பன மாற்றீடு செய்யப்படும் வரையில் அல்லது விற்கப்படும் வரையில் அவை அச் சொத்தின் பெறுமானத்தை அதிகரிக்கும் ஒரு செலவினமாக கருதப்படும்

ஆராய்ச்சி மானியத்திற்கு கிடைக்கப்பெற்ற நிதியமானது நேரடியாக திரட்டப்பட்ட நிதியத்தில் மூலதனமாக்கப்படும். அத்துடன் நிலையான சொத்தினை கொள்வனவு செய்தல், நிர்மாணித்தல், உற்பத்தி செய்தல் தொடர்பில் ஏற்ப்பட்ட செலவினம் அக்காலப் பகுதிக்குரிய வருமானக் கூற்றில் பதியப்படும்

### 3.3 பொறுப்புகளும் ஒதுக்கீடுகளும்

கோரப்படுதலின் அடிப்படையில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டியவைகளும் மற்றும் அறிக்கை செய்யப்படும் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் உட்பட்ட கொடுப்பனவுகளும் ஐந்தொகையில் பொறுப்புகளாக வகைப்படுத்தப்படும். அறிக்கை செய்யப்படும் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்கு பின்பு மேற்கொள்ளப்படவேண்டிய கொடுப்பனவுகள் நடைபல்லாத பொறுப்புகளாக ஐந்தொகையில் பதியப்படும்.

ஐந்தொகை உள்ளவாறான திகதியிலான சகல அறிந்த பொறுப்புகளும் நிதிக் கூற்று தயாரிக்கும் போது கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.3.1. ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்

ஊழியர் சேமலாபநிதியம் வறுமாறு கணிப்பீடு செய்யப்படும்:

| | |
|---|---|
| தொழில் தருனர் | 12% |
| தொழில் பெறுனர் | 8% |

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் பின்வறுமாறு கணிப்பீடு செய்யப்படும்:

| | |
|---|---|
| தொழில் தருனர் | 3% |

### 3.3.2. வியாபாரம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்

வியாபாரம் மற்றும் ஏனைய பெறுகைகளாவன அவற்றின் கிரய விலையிலேயே காட்டப்பட்டுள்ளது.

### 3.4. வருமானக் கூற்று

வருமானக் கூற்றினை முன்னளிப்பு செய்யும் நோக்குடன், செலவின முறைமையின் தன்மையாது சேர்த்துக் கொள்ளப்பட்து..

### 3.4.1 வருமானம்

மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் நடப்பு மற்றும் மூலதன செலவினங்கள் தொடர்பில் அரசிடம் பெறப்பட்ட மானியங்களாவன முறையே வருமானக் கூற்றில் மற்றும் திரட்டப்பட்ட நிதியங்களாகவும் இனங்காணப்பட்டன.

தேசிய ஆராய்ச்சி மன்ற மானியத்திலிருந்து முன்னெடுக்கப்பட்ட செலவினங்களாவன ,நடப்பு பெறுகைகளின் ஒரு பகுதியாக இனங்காணப்பட்டதுடன்,அச்செலவினங்களுக்குரித்தான காலப்பகுதிக்குரிய வருமானக் கூற்றிலும் அவை பதியப்பட்டன.

சொத்து,ஆதனம் கருவிகள் என்பனவற்றை விற்பனை செய்தலின் மூலமே அல்லது மாற்றீடு செய்தலின் மூலமே பெறக்கூடிய நஷ்டம் அல்லது இலாபமானது.அந்த சொத்து ஆதனம் கருவியின்

தேறிய விற்பனை பெறுமானத்தை அவற்றின் முன் கொண்டு செல்லும் மீதியுடன் ஒப்பீடு செய்து பார்த்து பெறப்படல் வேண்டும்.

### 3.4.2. செலவினம்.

வருடத்திற்கான இலாபம் அல்லது நஷ்டத்தை பெறுதல் பொருட்டு, தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் சகல செயற்பாடுகள் தொடர்பிலான செலவினங்கள் மன்றத்தின் வருமானத்திற்கு எதிராக பதியப்படும். திருத்தல் மற்றும் புதுப்பித்தல் தொடர்பில் ஏற்பட்ட செலவினங்கள் அவை இடம் பெற்ற வருடத்தின் செலவினங்களாக பதியப்படும்

தேசிய ஆராய்ச்சி மன்ற மானியத்திலிருந்து முன்னெடுக்கப்பட்ட செலவினங்களாவன, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினங்களாக அக்குறிப்பட்ட காலப்பகுதிக்கு வருமானக் கூற்றில் பதியப்படும். எனினும் சொத்து ஆதனம் கருவிகள் என்பனவைற்றை கொள்ளவனவு செய்தல் நிர்மாணித்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் ஏற்படும் செலவினங்களாவன அச் சொத்து ஆதனம் கருவிகளின் மூலதன செலவுடன் சேர்க்கப்படும்.

## 3.5. பொது

### 3.5.1 ஐந்தொகை திகதி பின் நிகழ்வுகள்

ஐந்தொகை திகதி பின் இடம் பெற்ற சகல நிகழ்வுகள் தொடர்பிலும் தேவைக்கு ஏற்ப உரிய சீராக்கங்களும் வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் தேவையான இடங்களில் நிதிக்கூற்றுக்களில் குறிப்புகளும் தரப்பட்டுள்ளன.

### 3.6 காசுப்பாய்ச்சல் கூற்று

நேரடி முறையினை பயன்படுத்தி காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது..

**இலங்கை தேசிய ஆராய்ச்சி மன்றம்.**

## 2011 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திக்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்.

| **குறிப்பு - 04 - நடப்பு பெறுகைகள்** | **2011**<br>ரூபா | **2010**<br>ரூபா |
|---|---|---|
| **4 அ - ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி.** | | |
| மானியம் பெறுநர்களின் நுகர்வுகள் | 14,471,341.73 | 8,827,387.69 |
| மானியம் பெறுநர்களின் ஆவணமயப்படுத்தல்கள் | - | 180,140.11 |
| மானியம் பெறுநர்களின் பிஎச்டி உதவிப்பணத்தொகை. | 4,071,126.07 | |
| மானியம் மற்றும் நிகழ்ச்சித்திட்ட நிர்வாகம் | 894,953.45 | |
| மானியம் பெறுநர்களின் பிரயாணம் | 39,312.56 | 869,560.08 |
| . | 19,476,733.81 | 9,877,087.88 |
| **4 ஆ - திறைசேரி நடப்பு வெளியீடுகள்** | | |
| 2010 ஜனவரி | 607,000.00 | 600,000.00 |
| 2010 பெப்ரவரி | 1,600,000.00 | 500,000.00 |
| 2010 மார்ச் | 153,000.00 | 500,000.00 |
| 2010 ஏப்ரில் | 867,000.00 | 500,000.00 |
| 2010 மே | 258,000.00 | - |
| 2010 ஜுன் | 320,000.00 | 854,000.00 |
| 2010 ஜுலை | 577,000.00 | 870,000.00 |
| 2010 ஆகஸ்ட் | 150,000.00 | 130,000.00 |
| 2010 செப்டெம்பர் | 633,000.00 | 700,000.00 |
| 2010 ஒக்டோபர் | 200,000.00 | 300,000.00 |
| 2010 நவம்பர் | 470,000.00 | 130,000.00 |
| 2010 டிசம்பர் | 479,000.00 | 335,000.00 |
| திறைசேரிக்கு திருப்பி அனுப்பப்பட்ட நிதியங்கள் | - | (9,957.60) |
| | 6,314,000.00 | 5,409,042.40 |
| **மொத்த தொகை** | **25,790,733.81** | **15,286,130.28** |

**5 - ஏனைய நிதி சொத்துகள்**

| | 2011<br>ரூபா. | **2010**<br>**ரூபா.** |
|---|---|---|
| கட்டிட வாடகை வைப்பு. | 90,000.00 | 90,000.00 |
| தொலை தொடர்பில் வைப்பு. | 15,000.00 | |
| போக்கு வரத்து வைப்பு. | - | 40,000.00 |
| மொத்தம் | **105,000.00** | **130,000.00** |

**இலங்கை தேசிய ஆராய்ச்சி மன்றம்**

## 2011 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திக்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்.

**6 சொத்து ஆதனம் கருவிகள்.**

| | 2011 | 2010 |
|---|---|---|
| **கிரயம்** | Rs. | Rs. |
| தே.வி.ம. அலுவலக சொத்துகள் | 7,218,522.05 | 6,436,703.28 |
| மானியங்களின் பிரதான கருவிகள் | 171,890,083.52 | 151,297,576.72 |
| மானியங்களின் சிறுஅளவிலான கருவிகள் | 8,182,411.80 | 7,596,147.97 |
| **மொத்த சொத்துகள்.** | **187,291,017.37** | **165,330,427.97** |
| **கழிக்க :- பெறுமானத் தேய்வு ஒதுக்கிடு.** | | |
| தே.வி.ம. அலுவலக சொத்துகள் | 5,339,961.77 | 4,996,536.60 |
| மானியங்களின் பிரதான கருவிகள் | 59,185,072.99 | 47,965,362.09 |
| மானியங்களின் சிறுஅளவிலான கருவிகள் | 3,269,219.58 | 2,642,178.60 |
| **மொத்தம் - பெறுமானத் தேய்வு ஒதுக்கிடு.** | 67,794,254.34 | 55,604,077.29 |
| **மொத்த தேறிய சொத்துகள்** | **119,496,763.03** | **109,726,350.68** |

**7 - செலுத்தப்பட வேண்டியவைகள்**

| | 2011 | 2010 |
|---|---|---|
| | Rs. | Rs. |
| செலுத்தப்பட வேண்டிய தொலைதொடர் பாடல் | 31,876.24 | 39,025.29 |
| செலுத்தப்பட வேண்டிய மின்சார கட்டணங்கள் | 15,151.70 | 16,264.50 |
| செலுத்தப்பட வேண்டிய தண்ணீர் கட்டணங்கள் | 517.44 | 517.44 |
| செலுத்தப்பட வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம். | - | - |
| செலுத்தப்பட வேண்டிய ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் | - | - |
| **மொத்தம்.** | **47,545.38** | **55,807.23** |

**8 - திரட்டப்பட்ட நிதி - மிகை/(நட்டம்)**

| | 2011 | 2010 |
|---|---|---|
| | ரூபா. | ரூபா. |
| திரட்டப்பட்ட நிதியம் - மிகை/(நட்டம்) | 407,089,881.50 | 241,760,651.73 |
| கூட்டுதொ - பெறுகையை விஞ்சிய செலவினம் | (18,148,801.89) | (14,902,659.31) |
| **மொத்தம்** | **388,941,079.61** | **226,857,992.42** |

# கணக்காய்வாளர் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல. ஈஎல்/எப்/என்ஆர்சீ/எப்ஏ/2011
My No

ඔබේ අංකය
உமது இல
Your No.

දිනය
திகதி 2012 செப்தெம்பர் 13
Date

National Research Council
RECEIVED
05 OCT 2012
Colombo 7.

தலைவர்,
தேசிய ஆராய்ச்சி சபை

**தேசிய ஆராய்ச்சி சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தேசிய ஆராய்ச்சி சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள், ஏனைய விளக்கத் தகவல்கள் என்பவற்றின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2007 செப்தெம்பர் 15 ஆந் திகதிய 1514/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசிலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கை சபையின் தலைவருக்கு 2012 மே 28 ஆந் திகதி வழங்கப்பட்டது.

1.2 சபையின் உருவாக்கம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு சனாதிபதியவர்களால் 2007 செப்தெம்பர் 15 ஆந் திகதிய 1514/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் நாட்டின் அதிசயமிக்க செயற்திறனுள்ள தேசிய விஞ்ஞான ரீதியான மற்றும் தொழில்நுட்ப அறிவு சார்ந்த சமூகமொன்றைக் கட்டியெழுப்பி அதன்மூலம் உச்ச நலனைப் பெறும் நோக்கத்தில் விஞ்ஞான ரீதியான மற்றும் தொழில்நுட்ப அறிவு சார்ந்த செயற்பாடுகளைத் திட்டமிடல் மற்றும் தொடர்பினை ஏற்படுத்துவதோடு அந் நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்ச்சி செயற்பாடுகளைச் செய்வதற்கு அரசாங்கத்திற்கு உதவியளிக்கும் வகையில் விசேட முகவர் நிறுவனமாகவும் தேசிய ஆராய்ச்சி சபை உருவாக்கப்பட்டிருந்தது.

අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone 2887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. oaggov@sltnet.lk

1.3 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள்

கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

2. நிதிக் கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களைத் தவிர்த்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய ஆராய்ச்சி சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 சிறப்பான கணக்கீட்டு நடைமுறைகள்

மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 781,819 பெறுமதியான நிலையான சொத்துக்களுக்காக பெறுமானத் தேய்வு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணங்கானமைகள்

---

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 2007 செப்தெம்பர் 15 ஆந் திகதிய 1514/28 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி | வெற்றிகரமான ஆராய்ச்சிகள் மற்றும் நவீன மயப்படுத்தலுக்காக தேசிய மட்டத்தில் ஏற்றுக்கொள்ளல் மற்றும் வழங்கல்கள் இடம்பெறும் முறைமையொன்றை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராததுடன் 2007 தொடக்கம் 2010 வரையான வருடங்களுக்காக சனாதிபதி விருது வழங்கல் விழாக்களும் நடாத்தப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டம் மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டம் | (i) உரிய நிதியத்திற்கான பங்களிப்புப் பணத்தினை கணிப்பீடு செய்யும் போது வாழ்க்கைச் செலவுப் படி உள்ளடங்கிய சம்பளம் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் ஆராய்ச்சி சபையில் சேவை புரிகின்ற 4 ஊழியர்களுக்காக வாழ்க்கைச் செலவுப்படி தவிர்த்து அடிப்படைச் சம்பளத்தில் பங்களிப்புப் பணம் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.<br><br>(ii) பணி ஒப்படைப்பு அடிப்படையில் சேவையில் ஈடுபட்ட இரண்டு உத்தியோகத்தர்களுக்காக உரிய நிதியங்களுக்கு பங்களிப்புப் பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |

(இ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபம் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

2.2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆராய்ச்சி மானியங்களுக்காக கிடைக்கப் பெற்ற நிதியங்களிலிருந்து ஆராய்ச்சி சபைக்கு ரூபா 781,819 பெறுமதியான நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) (i) மீளாய்வாண்டில் எரிபொருள் மற்றும் போக்குவரத்துக்காக பின்வரும் முறையில் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

| | ரூபா |
|---|---|
| தலைவரின் எரிபொருள் படிகள் | 217,500 |
| எரிபொருள் மீளளிப்பு | 388,874 |
| | 606,374 |

இதற்கு மேலதிகமாக உள்ளூர் போக்குவரத்துச் செலவினமாக ரூபா 149,750 தொகையும், பொருட் பதிவேடுகளினை பரீட்சிப்பதற்கான போக்குவரத்துக் கட்டணமாக ரூபா 103,950 தொகையும், தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்கான போக்குவரத்துச் செலவினமாக ரூபா 133,275 தொகையும் செலவிடப்பட்டிருந்தன. சபையின் பதவியணியினர் மற்றும் செயற்பொறுப்புக்களைக் கவனத்திற் கொள்ளும் போது போக்குவரத்துச் செலவினமாக அதிகமான பணம் செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) நாளாந்த ஓட்ட அட்டவணை முறையாகப் பராமரிக்கப்பட்டிராமையினால் எரிபொருள் பாவனையின் சரியான தன்மையினை பரிசோதனை செய்ய முடியாதிருந்தது.

3. நிதி மீளாய்வு

-----------------------

3.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 அந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவனத்தின் செயல் நடவடிக்கைகளின் விளைவுகள் ரூபா 18,148,802 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 14,902,659 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 3,246,143 குறைவொன்றைக் காணக்கூடியதாக இருந்தது. ஏனைய செலவினம் ரூபா 2.5 மில்லியனால் அதிகரித்தமை, பெறுமானத் தேய்வு மற்றும் ஒதுக்கங்கள் ரூபா ஒரு மில்லியனால் அதிகரித்தமை என்பன இதற்குத் தாக்கமளித்த பிரதான காரணங்களாகும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

4.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2000/2001 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்த ஆராய்ச்சி மானியங்களிருந்து 10 செயற்திட்டங்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 20,890,325 பெறுமதியான நிலையான சொத்துக்கள் / உபகரணங்களை உரிய ஆராய்ச்சி நிறுவனத்திற்கு கையளிப்பதற்கோ அல்லது மீண்டும் தேசிய ஆராய்ச்சி சபைக்கு ஒப்படைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆராய்ச்சி மானிய உடன்படிக்கையின் 5 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் ஆராய்ச்சியாளர்களுக்கு வழங்கப்படுகின்ற ஆராய்ச்சி உபகரணங்கள் தொடர்பான தகவல்கள் தேசிய ஆராய்ச்சி சபையின் பொருட் பதிவேட்டில் குறிப்பிடப்படுவதுடன் பிரதான ஆராய்ச்சியாளர், ஆராய்ச்சி சபையின் உத்தியோகத்தர் ஒருவர், உரிய நிறுவனத்தின் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் ஆகியோர் அதில் கையொப்பமிட வேண்டும். மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட ரூபா 28,296,195 பெறுமதியான ஆராய்ச்சி உபகரணங்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பின்வரும் செயற்திட்டங்கள் பூர்த்தியடைய வேண்டிய கால எல்லை முடிவடைந்திருந்தமையினால் வங்கிக் கணக்குகளும் மூடப்பட்டிருந்ததுடன் இறுதி ஆராய்ச்சி அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| செயற்திட்ட இலக்கம் | ஆராய்ச்சியாளரின் பெயர் | செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி | செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி | செயற்திட்ட மானியத்தின் பெறுமதி |
|---|---|---|---|---|
| | | | | ரூபா |
| 05 - 66 | திரு.பீ.எஸ்.எல். பத்திரன | 2006.07.15 | 2009.07.15 | 1,997,222 |
| 06 – 22 | திரு.எஸ்.எம்.பீ.றுவன்புர | 2008.04.01 | 2011.04.01 | 2,299,611 |
| 06 – 65 | திரு.எம்.ஆர்.சந்திரரத்தன | 2007.11.01 | 2010.10.29 | 549,000 |
| 07 - 10 | திரு.ஐ.ராஜபக்ஷ | 2009.12.30 | 2011.03.30 | 3,629,000 |
| | | | | 8,474,833 |

4.2 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது ரூபா 208,075,203 தொகை 51 ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்காக நடைமுறைக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அதில் ரூபா 1,269,919 தொகை பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அது மொத்தத் தொகையில் 0.61% ஆகும். ரூபா 40,463,000 தொகையினைப் பெற்ற 12 ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சி செயற்பாடுகளுக்காக எவ்வித தொகையையும் பயன்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) ஆராய்ச்சி மாணியம் வழங்கப்பட்ட சில ஆராய்ச்சிகள் தமது ஆராய்ச்சித் திட்டங்களை கைவிட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. ஆராய்ச்சியாளர்களுக்கு மானியம் வழங்கப்பட்ட முதல் சந்தர்ப்பத்திலேயே

உரிய ஆராய்ச்சிச் செயற்திட்டத்தின் பெயரிலான நடைமுறைக் கணக்கிற்கு அங்கீகரிக்கப்பட்ட மொத்தப் பணமும் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் ஆராய்ச்சி கைவிடப்பட்டமையினால் வங்கிக் கணக்குகளை மூடி விடுவதற்கோ அல்லது நிதி மற்றும் உபகரணங்களை வேறு செயற்திட்டங்களுக்கு மாற்றுவதற்காக நீண்ட காலம் எடுத்த காரணத்தினால் அத் தொகை 3-4 வருட காலம் செயற்பாடற்றிருந்தது. விபரம் கீழே காட்டப்படுகின்றது.

| மானிய இலக்கம் | வங்கியிலிடப்பட்ட கிடைத்த தொகை | வங்கிக் கணக்கு ஆரம்பிக்கப்பட்ட திகதி | வங்கிக் கணக்கு மூடப்பட்ட திகதி | வங்கிக் கணக்கில் நிதி செயற்பாடற்று இருந்த காலம் |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| 05 – 18 | 439,800 | 2006.06.19 | 2010.09.15 | 04 வருடம் 03 மாதம் |
| 06 – 41 | 1,998,000 | 2007.11.17 | 2011.12.17 | 04 வருடம் 01 மாதம் |
| 06 – 52 | 1,139,186 | 2007.11.17 | 2010.03.25 | 02 வருடம் 04 மாதம் |
| 06 – 54 | 831,917 | 2007.11.17 | 2010.03.25 | 02 வருடம் 04 மாதம் |
| 07 – 48 | 2,299,000 | 2009.05.25 | 2011.12.17 | 02 வருடம் 07 மாதம் |
| 07 – 57 | 2,550,000 | 2009.05.25 | 2011.09.09 | 02 வருடம் 04 மாதம் |
| 08 – 44 | 2,335,000 | 2010.11.29 | 2011.12.17 | 01 வருடம் 01 மாதம் |
| 09 – 44 | 1,697,740 | 2009.01.19 | 2011.08.29 | 02 வருடம் 07 மாதம் |
| 09 – 11 | 2,896,000 | 2010.11.29 | 2011.12.17 | 01 வருடம் 01 மாதம் |
| 09 - 32 | 1,700,000 | 2010.10.18 | 2011.12.17 | 01 வருடம் 02 மாதம் |

## 4.3 இனங்காணப்பட்ட நட்டம்

வடமேல் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்ட மானிய இல 5-29 இன் ஆராய்ச்சிச் செயற்திட்டத்திற்காக ரூபா 1,219,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட ஸ்பெக்ரோ மீற்றர் செயற்படாமையினால் உரிய நிறுவனத்திற்கு 2009 யூலை 20 ஆந் திகதி மீளக் கையளிக்கப்பட்டிருந்ததுடன் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 150,896 தொகை நிலுவையாக இருந்தது. இந்த இயந்திரத்தினை கொள்வனவு செய்யும் போது வற் வரியாகச் செலுத்தப்பட்ட ரூபா 159,000 தொகையினை அறவிடமுடியாதிருந்தமையினால் அத் தொகை வருமானம் / செலவினக் கணக்கில் பதிவழிக்கப்பட்டிருந்தது.

5. கணக்களிப்பும் நல்ஆளுகையும்

5.1 பணிப்பாளர் சபைக் கூட்டம்

மீளாய்வாண்டிற்காக 4 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

5.2 கூட்டிணைந்த திட்டம்

நிறுவனத்தின் தூரநோக்கு மற்றும் செயற்பணிகளை அடைந்துகொள்வதற்காக தேசிய ஆராய்ச்சி சபையினால் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

5.3 செயல் நடவடிக்கைத் திட்டம்

செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் சபையின் சகல செயற்பாடுகளையும் உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

5.4 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தாபிக்கப்பட்டிராததுடன் உள்ளகக் கணக்காய்வுகளுக்காக அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் உதவியும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) ஆராய்ச்சி மானியம்

(ஆ) வாகனக் கட்டுப்பாடு

எச்.ஏ.எஸ்.சமரவீர

கணக்காய்வாளர் தலைமை அதிபதி